

Registered as a Newspaper

# உதயன்

: 41
: 163

வெள்ளிக்கிழமை
08 மே 2026

சித்திரை 25 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2057

பக்கங்கள் –12
விலை – ரூபா 50

# பழைய முறையில் மாகாணத் தேர்தல்?

## உயர்மட்டத்தில் ஆராய்வு

கொழும்பு, மே 8

மாகாணசபைத் தேர்தலை பழைய முறையில் நடத்துவதற்கான தற்காலிக ஏற்பாடு ஒன்றைக் கொண்டுவருவது தொடர்பில் சட்டமா அதிபர் திணைக்களமும், தேர்தல்கள் ஆணைக் குழுவும் ஆராயவுள்ளன.

»11

## 40 நாடுகளுக்கு விசா விலக்கு!

### இலங்கை அரசு அதிரடி

கொழும்பு, மே 8

40 நாடுகளைச் சேர்ந்த மக்கள் விசா இல்லாமல் இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ள முடியும் என்று பொதுப்பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் அவர் மேலும் தெரிவித்தாவது:- இலங்கையில் சுற்றுலாத் துறையை மேற்படுத்துவது தொடர்பில் அண்மைக்

»11

## அவசரகாலச்சட்டம் மீண்டும் நீடிப்பு!

கொழும்பு, மே 8

நாட்டில் கடந்த சில மாதங்களாக அமுலில் இருந்துவரும் அவசரகாலச்சட்டம் மேலும் நீடிக்கப்பட்டுள்ளது.

சபாநாயகர் ஜகத் விக்ரமரத்ன தலைமையில் நாடாளுமன்றம் நேற்றுக் கூடியது. இதன்போதே, 139 மேலதிக வாக்குகளால் அவசரகாலச் சட்டம் நீடிக்கப்பட்டது.

பொதுமக்கள் பாதுகாப்

»11



## தோல் புற்றுநோய் நாட்டில் அதிகரிப்பு

விரிவு பக்கம்:- 03

### திஸ்ஸ விகாரைப் போராட்டம்

## 36 பேருக்கு எதிரான வழக்கை முன்கொண்டுசெல்லத் தீர்மானம்

### சாட்சியங்களைப் பெறுமாறு மன்று உத்தரவு

யாழ்ப்பாணம், மே 8

யாழ்ப்பாணம் தையிட்டி சட்டவிரோத திஸ்ஸ விகாரைக்கு எதிராக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட 36 பேருக்கு எதிராகப் பலாலிப் பொலிஸாரால் மல்லாகம் நீதவான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை

»11

### திருமுறிகண்டியில் சோகம்

## ரயிலுடன் மோதி ஆணொருவர் பலி

முல்லைத்தீவு, மே 8

முல்லைத்தீவு - திருமுறிகண்டிப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு ரயிலுடன் மோதி ஆணொருவர் உயிரிழந்தார்.

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த ரயில், தண்டவாளத்

»11

### முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்

## யாழ்.பல்கலையில் குருதிக்கொடை!

யாழ்ப்பாணம், மே 8

முள்ளிவாய்க்கால் நினைவேந்தலின் ஒரு பகுதியாக யாழ். பல்கலைக்கழகத்தில் இன்று குருதிக்கொடை இடம்பெறவுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மாணவர் ஒன்றியக்

»11



### எரிவாயு விலையேற்ற எதிரொலி

## சிற்றுண்டிகளும் விலை உயர்வு!

கொழும்பு, மே 8

லாப்ஸ் எரிவாயுவைப் பயன்படுத்தும் உணவகங்களில் உணவுகள் மற்றும் சிற்றுண்டிகளின் விலை நேற்று நள்ளிரவு முதல்

»11





### செம்மணிப் புதைகுழியில்

## குழந்தைகளின் என்புத்தொகுதிகள் தொடர்ச்சியாக அகழ்வு!

யாழ்ப்பாணம், மே 8

அரியாலை - செம்மணிப் புதைகுழிக்குள் இருந்து கடந்த இரண்டு நாள்களாக குழந்தைகளின் என்புத் தொகுதிகள் மீட்கப்பட்டு வருகின்றன.

செம்மணி மனிதப்புதைகுழி மீதான மூன்றாம்கட்ட அகழ்வுப் பணிகளின் 10ஆம் நாள் நடவடிக்கைகள் நேற்று இடம்பெற்றன. இதன்போது, புதைகுழிக்குள் இருந்து மேலும் நான்கு என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளநிலையில், இரண்டு என்புத் தொகுதிகள் மீட்கப்பட்டுள்ளன.

இதன்படி செம்மணிப் புதை

»11

### நயினாதீவு நாகபூஷணி ஆலய

## உண்டியல் உடைத்து ரூ.21 லட்சம் திருட்டு!

### இரு சிறுவர்கள் உட்பட மூவர் கைது



யாழ்ப்பாணம், மே 8

வரலாற்றுச் சிறப்புமிக்க நயினாதீவு நாகபூஷணி அம்மன் கோவிலின் உண்டியலை உடைத்து திருட்டில் ஈடுபட்ட குற்றச்சாட்டில்

»11

"விசம் விலையேறினாக் கூட உடனேயே உந்தச் சாப்பாடுகளையும் விலையேத்திடுவினம் கண்டியளோ"

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கொவிசெத

| | |
|---|---|
| திகதி | 07.05.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4424 |
| ஆங்கில எழுத்து | S |
| வெற்றி இலக்கங்கள் | 11 17 52 78 |
| விசேட எழுத்து | S |

### ஹந்தஹன ராசி சுப பலன்

| | |
|---|---|
| திகதி | 07.05.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1491 |
| வெற்றி இலக்கினம் | மீனம் |
| வெற்றி இலக்கங்கள் | 16 37 39 50 |

### NLB ஜய

| | |
|---|---|
| திகதி | 07.05.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0450 |
| ஆங்கில எழுத்து | R |
| வெற்றி இலக்கங்கள் | 0 5 5 1 |

### மெகா பவர்

| | |
|---|---|
| திகதி | 07.05.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2530 |
| ஆங்கில எழுத்து | Q |
| சுப்பர் இலக்கம் | 04 |
| வெற்றி இலக்கங்கள் | 05 14 66 75 |

### மஹஜன சம்பத

| | |
|---|---|
| திகதி | 07.05.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 6182 |
| ஆங்கில எழுத்து | R |
| வெற்றி இலக்கங்கள் | 3 1 4 7 2 7 |

### தன நிதானய

| | |
|---|---|
| திகதி | 07.05.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2212 |
| ஆங்கில எழுத்து | E |
| வெற்றி இலக்கங்கள் | 07 10 28 53 |
| விசேட எழுத்து | E |

### சுப தவசக்

| | |
|---|---|
| திகதி | 07.05.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0298 |
| வெற்றி இலக்கினம் | கடகம் |
| வெற்றி இலக்கங்கள் | 16 57 62 |

# அமெரிக்காவுக்குச் செலுத்தும் 626,755 டொலரும் மாயம்!

## சி.ஐ.டி.யினர் நீதிமன்றில் தெரிவிப்பு

**கொழும்பு,மே 8**

**இலங்கைத் தபால் திணைக்களம் அமெரிக்காவுக்குச் செலுத்தவேண்டிய 626,755 அமெரிக்க டொலர் போலி மின்னஞ்சல்கள் மூலம் மூன்றாம் தரப்பு ஒன்றுக்குத் திசைதிருப்பப்பட்டுள்ளதாகக் குற்றப்புலனாய்வுத் திணைக்களம் கோட்டை நீதவான் நீதிமன்றுக்குத் தெரிவித்துள்ளது.**

கோட்டை நீதவான் பசான் அமரசேன முன்னிலையில் நேற்று முன்தினம் வழக்கு விசாரணைக்கு வந்தபோதே சி.ஐ.டி. அதிகாரிகள் இவ்வாறு தெரிவித்தனர்.

சர்வதேச தபால் கொடுப்பனவுகளை ஒருங்கிணைக்கும் 'Universal Postal Union' (UPU) அமைப்பின் உத்தியோகபூர்வ மின்னஞ்சலுக்குப் பதிலாக, மோசடிக்காரர்களின் போலி மின்னஞ்சல் முகவரிகளுடன் தபால் திணைக்கள அதிகாரிகள் பரிமாற்றம் செய்துள்ளமை தெரியவந்துள்ளது.

2023 ஜூன் முதல் 'பணம் கிடைக்கவில்லை'என 9 போலி மின்னஞ்சல்கள் வந்துள்ளன. அதிகாரிகள் அவற்றைச் சரி பார்க்காமல், அதில் மூன்றுக்குப் பதிலளித்து பணப்பரிமாற்றங்களை மேற்கொண்டுள்ளனர். 2025 பெப்ரவரி 19 அன்று 435,864 அமெரிக்க டொலரும், 2025 ஒக்ரோபர் 16 அன்று 190,891 அமெரிக்க டொலரும் தபால் திணைக்களத்தினால் மூன்றாம் தரப்பினருக்கு அனுப்பப்பட்டுள்ளது. இந்தப் பணம் சென்றடைந்த குறிப்பிட்ட நபர் அல்லது தரப்பு குறித்து இதுவரை சந்தேகநபர்கள் அடையாளம் காணப்படவில்லை என்றும் குற்றப்புலனாய்வு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். விசாரணை அதிகாரிகளின் கோரிக்கையை ஏற்றுக்கொண்ட நீதவான், தபால் திணைக்களத்தின் மின்னஞ்சல் கட்டமைப்பை கள ஆய்வு செய்வதற்கு இலங்கை கணினி அவசர தயார்நிலைப் பிரிவுக்கு அனுமதி வழங்கினார். இந்த வழக்கை மீண்டும் ஜூலை 22 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ள நீதிமன்றம் தீர்மானித்துள்ளது. (ச-இ)

### சுபிரி தன சம்பத

| திகதி | தினம் | வெற்றி வாரம் |
|---|---|---|
| 07.05.2026 | வியாழக்கிழமை | 0890 |

| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
|---|---|
| O | 3 1 4 4 4 4 |

### Super Ball

| திகதி | தினம் |
|---|---|
| 07.05.2026 | வியாழக்கிழமை |

| சீட்டிழுப்பு வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
|---|---|---|
| 3156 | J | 20 21 45 61 |

### சனிதா

| திகதி | தினம் |
|---|---|
| 07.05.2026 | வியாழக்கிழமை |

| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|
| O | 19 25 44 64 | 5317 |

### SASIRI

| திகதி | தினம் |
|---|---|
| 07.05.2026 | வியாழக்கிழமை |

| வெற்றி வாரம் | வெற்றி இலக்கம் |
|---|---|
| 0986 | 12 17 31 |

### லக்ன ராசி

| திகதி | தினம் |
|---|---|
| 07.05.2026 | வியாழக்கிழமை |

| விருச்சிகம் | வெற்றி இலக்கம் | சீட்டிழுப்பு வாரம் |
|---|---|---|
| | 03 15 26 62 | 4868 |

### KAPRUKA

| திகதி | தினம் |
|---|---|
| 07.05.2026 | வியாழக்கிழமை |

| ஆங்கில எழுத்து | சுப்பர் இலக்கம் | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|
| P | 40 | 01 12 20 36 | 2332 |

### அத கோடிபதி

| திகதி | தினம் |
|---|---|
| 07.05.2026 | வியாழக்கிழமை |

| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|
| E | 01 04 14 27 | 2982 |

## நடப்பாண்டில் 13 பேர் டெங்கால் உயிரிழப்பு

கொழும்பு,மே 8

நடப்பாண்டில் இதுவரை 13 பேர் டெங்கு நோயால் உயிரிழந்துள்ளனர் என தேசிய டெங்குக் கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

நடப்பாண்டில் இதுவரை நாடு முழுவதும் 26,071 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

மார்ச் மாதம் 6,013 நோயாளர்களும், ஏப்ரல் மாதம் 5,662 நோயாளர்களும் மே 4 ஆம் திகதி வரை 809 நோயாளர்களும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அதேவேளை கொழும்பு, கம்பஹா, களுத்துறை, அம்பாந்தோட்டை, மாத்தறை மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்கள் அதிக எண்ணிக்கையிலான டெங்குத் தொற்று அபாய வலயங்களாக அடையாளம் காணப்பட்டுள்ளன. (ச-இ)



## இரு சகோதரிகள் ஒரே நாளில் சாவு

யாழ்ப்பாணம்,மே.8

தங்கை இறந்த சில மணித்தியாலத்தில் அக்காவும் திடீரென உயிரிழந்த சம்பவம் யாழ். மண்டைதீவில் கடந்த செவ்வாய்க்கிழமை பதிவாகியுள்ளது.

மண்டைதீவு 6 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த திருமதி. சிவமணி சந்திரவதனா காலமான செய்தி அறிந்து, அதிர்ச்சியில் அவரது மூத்த சகோதரி திருமதி. சிவசம்பு சந்திரோதயம் உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்படுகின்றது. இருவரது இறப்பும், மண்டைதீவு மக்களைப் பெரும் சோகத்தில் ஆழ்த்தியுள்ளது. இருவரதும் மறைவுக்கு ஏராளமானோர் தமது இரங்கல்களைத் தெரிவித்து வருகின்றனர். (க-66)



### சைபர் மோசடி

## 74 வெளிநாட்டவர்கள் ஒரே நாளில் சிக்கினர்!

கொழும்பு, மே 8

இலங்கையில் தங்கியிருந்து சட்டவிரோதமான முறையில் நிதி மோசடிகளில் ஈடுபட்டு வந்த வெளிநாட்டுப் பிரஜைகள் 74 பேர் கொள்ளுப்பிட்டி பொலிஸாரால் நேற்று முன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கொள்ளுப்பிட்டி பகுதியில் அமைந்துள்ள அடுக்குமாடிக் குடியிருப்பு ஒன்றில் பொலிஸ் குழுவினரால் விசேட சுற்றிவளைப்பு ஒன்று மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது, செல்லுபடியாகும் விசா இன்றி தங்கியிருந்ததோடு, இணையம் ஊடாக நிதி மோசடிகளில் ஈடுபட்டதாக சந்தேகிக்கப்படும் 41 ஆண்களும் 33 பெண்களும் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இவர்கள் அனைவரும் வியட்நாம் நாட்டவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொள்ளுப்பிட்டி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ச-இ)

## 3 கோடி ரூபா நிதி மோசடி; சந்தேகநபரொருவர் கைது

கொழும்பு, மே 8

வெளிநாடு செல்வதற்குத் தேவையான விசா பெற்றுத் தருவதாகக் கூறி பலரை ஏமாற்றி சுமார் மூன்று கோடி ரூபா பணத்தை மோசடி செய்த குற்றச்சாட்டில் சந்தேகநபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவினருக்குக் கிடைத்த 21 முறைப்பாடுகளின் அடிப்படையில் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின்போதே சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளார். கைதுசெய்யப்பட்டவர் பாணந்துறை பகுதியைச் சேர்ந்த 41 வயதுடையவர் எனவும் தனியார் நிறுவனம் ஒன்றின் பணிப்பாளர் ஒருவர் எனவும் தெரியவந்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.media




# மத்திய கிழக்குப் பதற்றம் ஸ்திரத்தன்மைக்கு பாதிப்பு

## இலங்கை கவலை

கொழும்பு, மே 8

**மத்திய கிழக்காசியப் பிராந்தியத்தில் அண்மைக் காலங்களாக அதிகரித்துவரும் வன்முறைகள் மற்றும் எரிசக்தி நிலையங்கள் மீதான தாக்குதல்கள், பிராந்திய அமைதிக்கும் உலகளாவிய விநியோகச் சங்கிலிக்கும் பெரும் சவாலாக அமைந்துள்ளதாக இலங்கை தெரிவித்துள்ளது.**

வெளிவிவகார, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:- சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பினரும் அதிகபட்ச நிதானத்தைக் கடைப்பிடிக்கவேண்டும். பேச்சு மூலம் பதற்றத்தைத் தணிக்க முன்வரவேண்டும். இந்த மோதல்கள் உலகளாவிய வர்த்தகம் மற்றும் விநியோகச் சங்கிலிகளைப் பாதிப்பதைத் தவிர்க்கவேண்டும். பிராந்தியத்தில் அமைதியையும் பாதுகாப்பையும் நிலைநாட்ட முன்னெடுக்கப்படும் அனைத்து சர்வதேச முயற்சிகளுக்கும் இலங்கை தனது ஆதரவைத் தொடர்ச்சியாக வழங்கும். சர்வதேச வர்த்தகத்திற்கு உகந்த சூழலை உருவாக்குவதற்கும், மனிதாபிமான அடிப்படையிலான தீர்வுகளை எட்டுவதற்கும் உலக நாடுகள் ஒன்றிணையவேண்டும் - என்றுள்ளது. (ச-இ)

## மின்சாரப் பேருந்துத் திட்டத்தை நடைமுறைப்படுத்த தீர்மானம்

கொழும்பு, மே 8

இலங்கையின் தனியார் பேருந்துத் துறை எதிர்கொண்டுள்ள நிதி மற்றும் தொழில்நுட்ப நெருக்கடிகளுக்குத் தீர்வாக, மின்சாரப் பேருந்துத் திட்டத்தை அறிமுகப்படுத்த இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கம் தீர்மானித்துள்ளது. இதுதொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம், அம்கொட் கார்ப்பரேஷன் மற்றும் இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கம் ஆகியவற்றிற்கு இடையே நேற்றுமுன்தினம் கைச்சாத்தானது. அடுத்த இரண்டு மாதங்களுக்குள் 100 சொகுசு மின்சாரப் பேருந்துகள் இறக்குமதி செய்யப்பட்டு சேவையில் ஈடுபடுத்தப்படும். இவை 32 ஆசனங்களைக் கொண்ட குளிரூட்டப்பட்ட சொகுசுப் பேருந்துகளாகும். (எ-இ)

## நாட்டில் அதிகரித்துவரும் தோல் புற்றுநோயாளர்கள்

கொழும்பு, மே 8

நாட்டில் தோல் புற்றுநோயால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்துள்ளது என்று சுகாதாரத் துறை எச்சரிக்கை விடுத்துள்ளது.

அதிகப்படியான சூரிய ஒளியின் தாக்கத்திலிருந்து பொதுமக்கள் பாதுகாப்பாக இருக்கவேண்டும். நாட்டில் ஆண்டுதோறும் சுமார் 35 ஆயிரம் தோல் புற்றுநோயாளர்கள் இனங்காணப்படுகின்றனர். கிட்டத்தட்ட 15,000 உயிரிழப்புகள் ஏற்படுகின்றன. தினமும் சராசரியாக 100 புதிய நோயாளர்கள் அடையாளம் காணப்படுவது நோயின் தீவிரத்தன்மையைக் காட்டுகின்றது. சூரிய ஒளி மிகத் தீவிரமாக இருக்கும் காலை 10 மணி முதல் மாலை 4 மணி வரையான காலப்பகுதியில் நேரடியாக வெயிலில் செல்வதைத் தவிர்க்கவேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)



## 514 பேர் கைது

கொழும்பு, மே 8

நாடளாவிய ரீதியில் நேற்றுமுன்தினம் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்ட விசேட சுற்றிவளைப்பில் 514 சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. குற்றங்களுடன் தொடர்புடைய 28 பேரும், பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 303 பேரும், திறந்த பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 147 பேரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர். மதுபோதையில் வாகனம் செலுத்திய 84 பேரும், கவனக்குறைவாக வாகனம் செலுத்திய 75 பேரும் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். பிற போக்குவரத்துக் குற்றங்களுக்காக 4,721 பேர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (எ-இ)

## மெட்ரோ பஸ் திட்டத்தால் ரூ.7 பில்லியன் வீணடிப்பு

### தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கம் தெரிவிப்பு

கொழும்பு, மே 8

அரசாங்கத்தினால் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள மெட்ரோ பேருந்துச் சேவை, நாட்டின் போக்குவரத்துத்துறையை மேலும் சீரழிக்கும். இந்தத் திட்டத்துக்காக சுமார் 7 பில்லியன் ரூபா செலவிடப்படுவது ஒரு தேசிய குற்றமாகும் என இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை போக்குவரத்துச் சபை ஏற்கனவே நடைமுறைப்படுத்திய தோல்வியடைந்த திட்டங்களையே இப்போது 'மெட்ரோ பேருந்து' என்ற பெயரில் மீண்டும் கொண்டு வந்துள்ளது. புதிய பஸ்களைக் கொள்வனவு செய்வது போக்குவரத்துத்துறையில் உள்ள அடிப்படைச் சிக்கல்களைத் தீர்க்காது. இது கடந்த காலத் தோல்விகளையே மீண்டும் பிரதிபலிக்கும். முறையான திட்டமிடல் இன்றிப் பெருந்தொகையான நிதியை இந்தத் திட்டத்துக்காகச் செலவிடுவது மக்களின் வரிப்பணம் மற்றும் திறைசேரி நிதியை சூறையாடப்படுவதாக [illegible]

## இனியாவது வாலைச் சுருட்டுவினமோ?

மதியாதார் முத்தம் மிதிக்கக்கூடாது எண்டு முந்தின ஆக்கள் அடிக்கடி சொல்லுவினம். அவையள் சோத்தில நல்லா உப்புப் போட்டுச் சாப்பிட்டபடியால ரோசமும் கூடவா இருந்திருக்கும். அதால தங்களை மதிக்காதவையளை அவையள் பிறகு எட்டியும் பாக்கமாட்டினம். ஆனால் இப்பகூட உப்புப் போட்டால் வருத்தம் வருமெண்டு எல்லாரும் அதைக் குறைச்சதாலையோ என்னவோ ரோசமும் எங்கட ஆக்களுக்கு குறைஞ்சு போட்டுது. அதால இப்ப உங்களை மதிக்காட்டியும்கூட அடிக்கடி அந்த இடத்தை மிதிக்கிறதும், பல்லை இளிக்கிறதும் நடக்கத்தான் செய்யுது. அதுவும் அரசியல்வாதியள் 'ரோசம் கிலோ என்ன விலை?' எண்டு கேக்கிற அளவில இருக்கினம்.

போனகிழமை திசைகாட்டியின்ர மேதின ஊர்வலம் ஒண்டு யாழ்ப்பாணம் புது பஸ் ஸ்ராண்டில நடந்தது. வழக்கத்தைவிட, இந்தமுறை அவையின்ர மேதினக் கூட்டம் களை கட்டினதென்னவோ உண்மைதான். அதிலையும் முந்தி மேதினத்தை யாழ்ப்பாணத்தில பெரிசாக் கொண்டாடுற கட்சியளில ஒண்டு இந்தமுறை மாங்குளத்திலையும், இன்னொரு கட்சி மண்டபத்திலையும் தங்கட கொண்டாட்டங்களைச் செய்ததால ஒப்பீட்டளவில திசைகாட்டிக்காரரின்ர மேதின ஊர்வலம் தான் பெரிசா இருந்தது. இந்த மேதின ஊர்வலத்தின்ர முடிவில திசைகாட்டியின்ர அமைச்சர்மார், எம்.பி.க்கள் எல்லாரும் உரையாற்றினவை. ஆனால் அந்தக் கூட்டத்தில நிண்ட திசைகாட்டி எம்.பி.மார் ரண்டு பேருக்கு உரையாற்ற சான்ஸ் குடுக்கேலை. கடைசி மட்டும் தங்களுக்கும் பேசுறதுக்கு சான்ஸ் வரும், தங்கட பேரைச் சொல்லி உரையாற்றக் கூப்பிடுவினம் எண்டு நம்பிக்கொண்டிருந்த அந்த ரண்டு எம்.பி.மாரும் கூட்டம் முடிய ஏமாந்துபோய், தலையைத் தொங்கப் போட்டுக்கொண்டு போனதைப் பாக்கவே பரிதாபமாக் கிடந்தது.

இதொண்டும் தற்செயலா நடக்கேலையாம். ஏற்கனவே கட்சி அந்த ரண்டுபேரையும் கட்டம் கட்டித் தான் வைச்சிருக்காம். ஏனெண்டால் ரண்டு பேரும் திசைகாட்டிக் கட்சிக்காரருக்குரிய ஒழுங்கின்படி நடக்கிறேலையாம். அதில ஒருத்தர் பிரைவேட்டா ரியூசன் வைச்சு நடத்திறார். அதால அவர் களத்துக்கு இறங்கி வேலை செய்யிறதை விடவும், பேஸ்புக்கில தான் அரசியல் செய்யிறாராம். எல்லா நிர்வாக மட்டங்களிலையும் புகுந்து, தனக்கு இசைவான வேலையளைச் செய்விக்கிறதும், ஆளுங்கட்சியின்ர பேரைப் பாவிச்சு வெருட்டுறதும் தான் அவரின்ர முழுநேர வேலையாம். இதெல்லாம் உண்மையான திசைகாட்டிக்காரருக்கு கடுப்பாகி, அவருக்கு காத்தைக் குறைக்கிறதெண்டு முடிவு செய்திட்டினம். அதைவிட இனிமேல் அவருக்கு சீற் குடுக்கிறேலையெண்டும் கட்சி மேலிடம் தீர்மானிச்சு, அவரைத் தானாவே ஒதுங்க வைக்கிற மாதிரி நடக்கினமாம். அதில ஒண்டுதான் இந்த மேதினத்தில பேசவிடாமல் செய்தது எண்டு சொல்லுகினம். பாப்பம், இதுக்குப் பிறகாவது அவர் வாலைச் சுருட்டுறாரோ இல்லாட்டி வாலாட்டுறாரோ எண்டு பாப்பம்.

padsi@uthayan.com -பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

வடக்கு, கிழக்கில்

# புழுதி விதைப்பு நெற்செய்கையாளர்கள் இலவசக் காப்பீடு பெறுவதில் நெருக்கடி

## நாடாளுமன்றில் எடுத்துரைப்பு

**கொழும்பு, மே 8**

**வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் புழுதி விதைப்பு முறையைப் பின்பற்றும் நெற்செய்கையாளர்கள், கமத்தொழில் காப்புறுதிச் சபையால் வழங்கப்படுகின்ற இலவசக் காப்பீட்டைப் பெறுவதில், பல்வேறு நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்துவருகின்றனர் என்று நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்தார்.**

நாடாளுமன்றில் இடம்பெற்ற மீட்பு, புனர்வாழ்வு மற்றும் கடனிறுக்க வகையின்மை (கூட்டிணைப்பு மற்றும் தனிப்பட்ட) சட்டவரைவின் இரண்டாம் மதிப்பீட்டு விவாதத்தில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது- அரசாங்க சுற்றறிக்கைகளில் பிராந்திய அடிப்படையிலான நலன்கள் கருத்திற்கொள்ளப்படுவதில்லை.

அதற்கு ஓர் எடுத்துக்காட்டு கமநலக் காப்புறுதிச் சபையின் சுற்றறிக்கை. வடக்கு மற்றும் கிழக்கிலுள்ள பெருமளவான நெற்செய்கையாளர்கள் பெரும்போகக் காலத்தில் புழுதி விதைப்பு முறையில் உலர் நிலத்தில் நெல் விதைப்பை மேற்கொள்கின்றனர். நெற்பயிர்கள் அனர்த்தம் காரணமாக அழிவடையும் நிலை நேரிடும்போது, அவ்வழிவுக்கான காப்பீட்டைப் பெற்றுக்கொள்ளமுடியாது அவதியுறுகின்றனர். மழையை நம்பி புழுதி விதைப்பு முறையில் உலர் நிலத்தில் நெல் விதைப்பை மேற்கொள்ளும் விவசாயிகளின் அறுவடைக்காலம் பிந்துவதாலேயே இந்த நிலை ஏற்படுகின்றது. மூன்றரை மாத நெல்லை (105 நாள்) உலர் நிலத்தில் புழுதி விதைப்பு மேற்கொண்டால், அறுவடைக்காலம் நான்கு மாதங்களைக் கடக்கின்றது. அதனால் நெற்பயிர்கள் அழிவுறுகின்ற சந்தர்ப்பங்களில், அந்த அழிவுகளுக்குரிய காப்பீட்டை கமத்தொழில் காப்புறுதிச்சபை வழங்க மறுக்கின்றது. கமத்தொழில் காப்புறுதிச்சபையின் சுற்றறிக்கையில் புழுதி விதைப்பு முறைக்கான காப்பீட்டுக்குரிய ஏற்பாடுகள் இல்லை எனச் சொல்லப்படுகின்றது. இதனால் வடக்கு, கிழக்கில் புழுதி விதைப்பு முறையைப் பின்பற்றும் நெற்செய்கையாளர்கள் பெரிதும் பாதிப்புகளை எதிர்நோக்குகின்றனர். எனவே புழுதி விதைப்பு முறையில் நெற்செய்கை மேற்கொள்கின்ற விவசாயிகளுக்கும் காப்பீடுகளை வழங்குவதற்கு ஏற்றவாறு, கமத்தொழில் காப்புறுதிச் சபையின் சுற்றறிக்கையில் மாற்றங்களைக் கொண்டுவர வேண்டும்-என்றார். (க-246)

## குருநாகல் மாநகரசபை உறுப்பினர் பதவிதுறப்பு

கொழும்பு, மே 8

குருநாகல் மாநகரசபையில் நிலவும் முறையற்ற நிர்வாகம் மற்றும் ஊழல் மோசடிகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து, தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர் பி.டபிள்யூ. பிரேமச்சந்திர தனது பதவியை இராஜினாமா செய்துள்ளார். தனது இராஜினாமாக் கடிதத்தை அவர் குருநாகல் மேயரிடம் உத்தியோகபூர்வமாகக் கையளித்துள்ளார்.

மாநகரசபைக்குள் இடம்பெறும் முறையற்ற செயற்பாடுகளைத் தடுக்கமுடியாமையே தனது பதவி விலகலுக்குக் காரணம் எனத் தெரிவித்துள்ள அவர், தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)

## கோர விபத்தில் இருவர் பலி!

இரத்தினபுரி,மே 8

இரத்தினபுரி- பெல்மதுளை பகுதியில் நேற்றுமுன்தினம் லொறி - ஓட்டோ நேருக்குநேர் மோதி இடம்பெற்ற கோர விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளனர். அத்துடன் ஓட்டோ சாரதி படுகாயமடைந்த நிலையில் தீவிர சிகிச்சைப்பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பில் பெல்மதுளை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துவருகின்றனர். (ச-இ)

## தேனிசை செல்லப்பாவுக்கு நாடாளுமன்றத்தில் அஞ்சலி

கொழும்பு, மே 8

எழுச்சிப்பாடகர் தேனிசை செல்லப்பாவுக்கு, நாடாளுமன்றில் நேற்றுமுன்தினம் அஞ்சலி செலுத்தப்பட்டது.

நாடாளுமன்றில் இடம்பெற்ற மீட்பு, புனர்வாழ்வு மற்றும் கடனிறுக்க வகையின்மை (கூட்டிணைப்பு மற்றும் தனிப்பட்ட) சட்டவரைவின் இரண்டாம் மதிப்பீட்டு விவாதத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் உரையாற்றியபோது ஈழத்தமிழர்கள் சார்பாக அஞ்சலி செலுத்தினார். (க-246)

# அதிக வருமானத்தைப் பெற்றுத்தரும் சந்தையில் அடிப்படை வசதியில்லை

## நவீனமயப்படுத்தக் கோரிக்கை

மன்னார், மே 8

நாளாந்தம் அதிக வருமானத்தைப் பெற்றுத்தரும் மன்னார் நகர மீன் விற்பனை நிலையம் அடிப்படை வசதிகளற்றுள்ளது. அதை உடனடியாக நவீனமயப்படுத்தி வசதிகளை ஏற்படுத்தவேண்டும் என்று மன்னார் நகர சபை உறுப்பினர் சோமநாதன் பிரசாத் கோரிக்கை விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது- மன்னார் நகர் மீன் சந்தை, மரக்கறிச் சந்தை ஆகியவற்றைப்புனரமைத்தல், அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல் மற்றும் பராமரிப்பற்றுள்ள காணிகளைத் துப்புரவு செய்தல் எனப் பல பிரேரணைகளை நாம் இதுவரை முன்வைத்துள்ளோம். ஆனால் எதற்கும் பதிலில்லை. இந்த மீன்சந்தை அன்றாடம் மக்கள் பயன்படுத்தும் ஒரு இடம். இங்கு வருடாவருடம் 15 இலட்சம் ரூபாவுக்கும் மேற்பட்ட வருமானம் குத்தகை மூலம் கிடைக்கின்றது. எனவே உடனடியாக குறைந்தது மூன்று மாதத்துக்குள் மீன் சந்தையை நவீனமயப்படுத்தி, மக்கள் பாவனைக்கு ஒப்படைக்கப்பட வேண்டும்-என்றார். (க-56)

# இன்றைய ராசி உங்களுக்கு எப்படி?

**மேடம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். வாழ்க்கைத்துணைவழியில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். ஆனால், புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும்.

**இடபம்:** மனதில் சஞ்சலம் ஏற்பட்டு நீங்கும். தாயின் தேவையை நிறைவேற்ற சிறிது அலையவேண்டியிருக்கும். நீண்டநாள்களாக நிறைவேற்றவேண்டும் என்று நினைத்திருந்த தெய்வப் பிரார்த்தனைகளை இன்று நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படும்.

**மிதுனம்:** தெய்வ அனுக்கிரகம் நிறைந்த நாளாக இருக்கும். நீண்டநாள்களாக எதிர்பார்த்து ஏமாந்த பணம் இன்று கைக்கு வந்து மகிழ்ச்சி தரும். சிலருக்கு மகான்களைத் தரிசிக்கவும் அவர்களுடைய ஆசிகளைப் பெறவும் வாய்ப்பு ஏற்படும்.

**கடகம்:** அதிர்ஷ்டகரமான நாளாக இருக்கும். சகோதரவகையில் ஆதாயம் ஏற்படக்கூடும். உறவினர்கள் வருகையால் வீட்டில் சிறுசிறு சலசலப்புகள் ஏற்படக்கூடும். எதிர்பார்த்த பணவரவுக்கு வாய்ப்பு உண்டு.

**சிம்மம்:** மகிழ்ச்சி தரும் நாளாக இருக்கும். வாழ்க்கைத்துணையுடன் ஏற்பட்டிருந்த மனவருத்தம் நீங்கி அந்நியோன்யம் அதிகரிக்கும். வெளியூர்ப் பயணங்களைத் தவிர்க்கவும். தந்தைவழியில் சில செலவுகள் ஏற்படக்கூடும்.

**கன்னி:** புதிய முயற்சிகள் அனுகூலமாக முடியும். குடும்பப் பொறுப்புகளை நிறைவேற்றுவதில் அலைச்சலும் சோர்வும் உண்டாகும். சகோதரவகையில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

**துலாம்:** உற்சாகமான நாளாக இருக்கும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். குடும்பத்தில் பெரியவர்களின் ஆலோசனை பயனுள்ளதாக இருக்கும்.

**விருச்சிகம்:** மனதில் குழப்பம் ஏற்பட்டு நீங்கும். தாய்வழியில் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும். வாழ்க்கைத்துணையுடன் அனுசரித்துச் செல்லவும். உறவினர்கள் வருகையால் சில பிரச்சினைகள் ஏற்பட்டாலும் பாதிப்பு இருக்காது.

**தனுசு:** புதிய முயற்சி சாதகமாகமுடியும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**மகரம்:** அதிர்ஷ்டம் தரும் நாளாக இருக்கும். சகோதரர்கள் உதவி கேட்டு வருவார்கள். எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு.

**கும்பம்:** எதிலும் பொறுமையைக் கடைப்பிடிக்கவேண்டிய நாள். மற்றவர்களுடன் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். சிலருக்கு நவீன டிசைனில் ஆடைகள் வாங்கும் வாய்ப்பு ஏற்படும்.

**மீனம்:** இன்று புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. குடும்பப் பொறுப்புகளின் காரணமாக அலைச்சல் ஏற்படக்கூடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உண்மை - நேர்மை - அஞ்சாமை


# இலங்கையை விழுங்கும் இணைய மோசடிகள்!

இலங்கையின் தேசியப் பாதுகாப்பு மற்றும் பொருளாதார ஸ்திரத்தன்மைக்கு அச்சுறுத்தல் விடுக்கக்கூடிய ஒரு புதிய யுத்தமாக 'இணைய மோசடிகள்' உருவெடுத்துள்ளன. அண்மைக்காலமாக நாட்டில் பதிவாகிவரும் நிதி மோசடிகள், வெறும் தனிநபர்களைக் குறிவைப்பதோடு நின்றுவிடாமல், நாட்டின் அரச திறைசேரியின் நிதியையே அபகரிக்கும் அளவுக்கு விஸ்வரூபம் எடுத்துள்ளமை அதிர்ச்சியளிப்பதாக இருக்கின்றது. நாட்டின் பல்வேறு பகுதிகளில் அண்மைய நாள்களில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புகள், இந்த மோசடிகளின் பின்னணியில் உள்ள கசப்பான உண்மைகளை வெளிச்சம் போட்டுக் காட்டியுள்ளன. நூற்றுக்கணக்கான வெளிநாட்டவர்கள், குறிப்பாக சீனப்பிரஜைகள், சுற்றுலா விசாக்களைப் பயன்படுத்தி நாட்டுக்குள் நுழைந்து, இங்கேயே தங்கியிருந்து பெரியளவிலான இணைய நிதி மோசடிகளில் ஈடுபட்டுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட நவீன இலத்திரனியல் உபகரணங்கள், இந்த மோசடிகள் எவ்வளவு திட்டமிட்ட முறையில் முன்னெடுக்கப்படுகின்றன என்பதற்குச் சான்றாகும்.

இலங்கை, தனது பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்காக சுற்றுலாத்துறையை நம்பியிருக்கிறது. இதற்காக அறிமுகப்படுத்தப்பட்ட இலகுவான விசா நடைமுறைகள் மற்றும் 'வருகை நேர விசா' வசதிகள், உண்மையான சுற்றுலாப்பயணிகளை ஈர்ப்பதற்குப் பதிலாக, சர்வதேச மோசடிக்கும்பல்கள் இலங்கையை ஒரு 'பாதுகாப்பான புகலிடமாக' மாற்றுவதற்கு வழிவகுத்துள்ளன என்றே கருதவேண்டியிருக்கின்றது. விசா நடைமுறைகளில் உள்ள தளர்வுகளைப் பயன்படுத்தி, சட்டவிரோதமாகத் தங்கியிருந்து இவ்வாறான குற்றங்களில் ஈடுபடுபவர்களைக் கட்டுப்படுத்தத் தவறியது புலனாய்வு மற்றும் குடிவரவுத் துறையினரின் பலவீனத்தையே காட்டுகின்றது. மியான்மர் போன்ற தென்கிழக்காசிய நாடுகளில் இவ்வாறான இணையக் குற்றக்கும்பல்கள் நிலைகொண்டு, ஒரு நிழல் அரசாங்கத்தையே நடத்தும் அளவுக்கு வளர்ந்துள்ளதை நாம் முன்னுதாரணமாகக் கொள்ளவேண்டும். இலங்கை அந்தநிலையை நோக்கித் தள்ளப்படக்கூடாது. அரச துறை, தனியார் துறை மற்றும் பொதுமக்கள் என சகல தரப்பினரும் இந்த மோசடியாளர்களின் வலைக்குள் சிக்கும் அபாயம் இன்று அதிகரித்துள்ளது. குறிப்பாக, இணைய வழியில் பறிபோகும் பணத்தை மீட்பது இலங்கையின் தற்போதைய சட்ட மற்றும் தொழில்நுட்பக் கட்டமைப்பின் கீழ் நடைமுறைச் சாத்தியமற்ற ஒன்றாகவே இருந்து வருகின்றது.

பொலிஸார், பொதுமக்களுக்கு விழிப்புணர்வுகளை வழங்கினாலும், தொழில்நுட்பரீதியாக மிகவும் முன்னேற்றமடைந்த இந்த மோசடியாளர்களை எதிர்கொள்ள அந்த விழிப்புணர்வு மட்டும் போதாது. அரசாங்கம் இந்த விடயத்தில் விரைவான நடவடிக்கை எடுக்கவேண்டும். முதலாவதாக, விசா நடைமுறைகள் மறுசீரமைக்கப்படவேண்டும். சுற்றுலாப்பயணிகளின் வருகையை உறுதிப்படுத்தும் அதேவேளை, அவர்களின் பின்னணி மற்றும் தங்குமிடங்கள் குறித்த முறையான கண்காணிப்பு அவசியமாகும். இரண்டாவதாக, இணையக் குற்றங்களைத் தடுப்பதற்கான சர்வதேச ஒத்துழைப்பை இலங்கை பலப்படுத்தவேண்டும். மோசடியாளர்கள் வெளிநாட்டவர்களாக இருக்கும் பட்சத்தில், அந்தந்த நாடுகளுடன் இணைந்து குற்றவாளிகளைத் தண்டிப்பதற்கும், இழந்த நிதியை மீட்பதற்கும் இராஜதந்திர ரீதியான அழுத்தங்கள் பிரயோகிக்கப்படவேண்டும். இலங்கை ஒரு 'இணைய மோசடி மையமாக' மாறுவதை அனுமதிப்பது, எதிர்காலத்தில் அந்நிய முதலீடுகளையும், சர்வதேச நற்பெயரையும் முற்றாகச் சிதைத்துவிடும். எனவே, அரசாங்கம் கடுமையான சட்டங்கள் மற்றும் நவீன தொழில்நுட்பக் கண்காணிப்பு மூலம் இந்த அச்சுறுத்தலை வேரறுக்க முன்வரவேண்டும். இல்லையெனில், ஒரு நாடாக நாம் சந்திக்கப்போகும் இழப்புகள் ஈடுசெய்ய முடியாததாகிவிடும்.


செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com






## பொய்யாமொழி

**எழுமை எழுபிறப்பும் உள்ளுவர் தங்கண்**
**விழுமந் துடைத்தவர் நட்பு**

**பொருள்:** தம்முடைய துன்பத்தைப் போக்கி உதவியவரின் நட்பைப் பல்வேறு வகையான பிறவியிலும் மறவாமல் போற்றுவர் பெரியோர்.




# அரச நிறுவனங்கள் மறுசீரமைப்பு உலக வங்கி தொழில்நுட்ப ஆதரவு




கொழும்பு, மே 8

**இலங்கையின் அரச நிறுவனங்களை மறுசீரமைத்தல் மற்றும் நவீனமயமாக்கல் பணிகளுக்கு உலக வங்கி தனது முழுமையான ஒத்துழைப்பை வழங்க முன்வந்துள்ளது.**

உலக வங்கியின் இலங்கைக்கான முகாமையாளர் கெவர்க் சர்க்ஸியன் தலைமையிலான குழுவினர், ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்கவைச் சந்தித்தபோது இதுகுறித்துப் பேசப்பட்டது.

அரசாங்கத்திற்கு வருமானம் ஈட்டித்தரும் முக்கியமான நிறுவனங்களை மறுசீரமைப்பதற்கான திட்டங்கள் மற்றும் அவற்றின் தற்போதைய முன்னேற்றம் குறித்து விவாதிக்கப்பட்டது.

அரச நிறுவனங்களில் பணிபுரியும் அதிகாரிகளின் நேர்மையைப் பாதுகாப்பதற்கும், ஊழல்களைத் தடுப்பதற்கும் நிறுவப்பட்டுள்ள 'உள்ளக விவகாரப் பிரிவு' சார்ந்த வேலைத் திட்டங்களில் உலக வங்கி இணைந்து செயற்படவுள்ளது.

உலக வங்கியின் இலங்கைக்கான முகாமையாளர் கெவர்க் சர்க்ஸியன், சிரேஷ்ட பொருளாதார நிபுணர்களான ரிச்சர்ட் வோக்கர், அந்தனி ஒபேசேகர மற்றும் நிர்வாக விசேட நிபுணர் டில் ஹார்ட்மேன் ஆகியோர் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டனர். (ச-இ)

# இறக்குமதி சோளத்துக்கு பண்டவரி அதிகரிப்பு

கொழும்பு,மே 8

இறக்குமதி செய்யப்படும் சோளத்திற்காக விதிக்கப்பட்டுள்ள விசேட வர்த்தகப் பண்ட வரியை உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் அதிகரிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

நிதி அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் படி, இறக்குமதி செய்யப்படும் ஒரு கிலோகிராம் சோளத்துக்கான வரி 50 ரூபா வரை அதிகரிக்கப்பட்டுள்ளது.

நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது. (ச-இ)

# மாணவருக்கான விசாவில் அவுஸ்திரேலியா கடும் பிடி



கொழும்பு, மே 8

சர்வதேச மாணவர்களுக்கான விசா அனுமதியை அவுஸ்திரேலியா பெருமளவு கட்டுப்படுத்தி வரும் நிலையில், அதிகமான இலங்கை மாணவர்களின் விசாக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

2026ஆம் ஆண்டின் தொடக்கத்தில் இருந்து சர்வதேச மாணவர்களுக்கான விசாக்களை நிராகரிப்பதில் அவுஸ்திரேலியா சாதனை அளவை எட்டியுள்ளது. 2026 பெப்ரவரி மாதத்தில் பல்கலைக்கழக மாணவர் விசா நிராகரிப்பு வீதம் 32.5 வீதமாக உயர்ந்துள்ளது. இது கடந்த 20 ஆண்டுகளில் இல்லாத மிக உயர்ந்த அளவாகும். இதனால் இலங்கை, இந்தியா, நேபாளம், பங்களாதேஷ் மற்றும் பூட்டான் ஆகிய நாடுகளைச் சேர்ந்த மாணவர்களே அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனர். இலங்கையிலிருந்து விண்ணப்பித்த மாணவர்களில் 38 வீதமானோரின் விசாக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளதாக 'த நோட்டிசர்' அறிக்கை தெரிவிக்கிறது. (எ-இ)

# இலங்கை – தென்கொரியா இடையே கடன் மறுசீரமைப்பு ஒப்பந்தங்கள்!

கொழும்பு, மே 8

இலங்கை மற்றும் தென்கொரியக் குடியரசுக்கும் இடையிலான பொருளாதார உறவுகளை வலுப்படுத்தும் நோக்கில், 267 மில்லியன் டொலர் பெறுமதியான கடன் மறுசீரமைப்பு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டுள்ளன.

இலங்கை அரசாங்கத்துக்கும் கொரிய குடியரசுக்கும் இடையிலான பொருளாதார மேம்பாட்டு ஒத்துழைப்பு நிதியக் கொள்கை உரையாடல் கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. சுமார் 267 மில்லியன் டொலர் பெறுமதியான 18 கடன் திட்டங்களுக்கான மறுசீரமைப்பு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டன. இலங்கையின் கடன் மறுசீரமைப்புச் செயன்முறைக்கு மத்தியில், பரஸ்பர உதவிகளைத் தொடர்ச்சியாக வழங்குவதில் தென்கொரியா கொண்டுள்ள உறுதிப்பாட்டை இந்த நிர்வாக ரீதியான அடைவு காண்பிப்பதாக நிதியமைச்சு தெரிவித்துள்ளது. (ச-இ)

**நாளை**

சனிக்கிழமை- சித்திரை 26


09.05.2026

சுபநேரம் : 02 .54 - 04.24

ராகுகாலம் : 08.54 - 10.24


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# ஆளுநர்களின் கீழான ஆட்சிமுறை மாகாணங்களுக்கு முறையற்றது!



## பவ்ரல் அமைப்பு சுட்டிக்காட்டு

கொழும்பு, மே 8

**சுமார் 14 வருடங்களாக மக்கள் பிரதிநிதிகள் இன்றி, ஆளுநர்களின் அதிகாரத்தின் கீழேயே மாகாணசபைகள் இயங்கி வருகின்றன. இது ஜனநாயகப் பண்புகளுக்கு எதிரானது என பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி வலியுறுத்தியுள்ளார்.**

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

கடந்த மூன்று அரசாங்கங்களைப் போலவே தற்போதைய தேசிய மக்கள் சக்தி அரசாங்கமும் மாகாண சபைத் தேர்தலைத் தட்டிக்கழிக்கப் பல்வேறு காரணங்களைக் கூறிவருகின்றது. தேசிய மக்கள் சக்தி தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் ஓராண்டுக்குள் உள்ளூராட்சி மற்றும் மாகாணசபைத் தேர்தல்களை நடத்துவதாக உறுதியளித்தது. ஆனால், அரசாங்கம் அமைந்து ஒன்றரை வருடங்கள் கடந்தும் அதற்கான எந்த ஆயத்தங்களும் இல்லை.

தேர்தல் முறை குறித்து ஆராய நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கை 3 மாதங்களாகியும் வெளிவராதது, தேர்தலைத் தாமதப்படுத்தும் ஒரு உத்தியோகபூர்வ தந்திரோபாயமோ என்ற சந்தேகம் எழுகின்றது. மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்குச் சட்டத்தடைகள் இருப்பதாகக் கூறுவது முரணானது. அரசாங்கத்துக்கு நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலம் உள்ளது. அரசாங்கம் மனது வைத்தால், அடுத்த 3 மாதங்களுக்குள் தேவையான சட்டத் திருத்தங்களை மேற்கொண்டு தேர்தலை நடத்த முடியும். இதற்காகப் புதிய குழுக்களோ அல்லது அறிக்கைகளோ அவசியமில்லை. பழைய முறையிலாவது தேர்தலை நடத்துவதற்கு நாடாளுமன்றத்தில் தனிநபர் பிரேரணைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிலையில், அரசாங்கம் மௌனம் காப்பது ஏன்- என்றார். (ச-இ)

# நீதித்துறையின் சுதந்திரத்தில் ஜனாதிபதி தலையிடுகிறார்!

## சட்டத்தரணிகள் சங்கம் கண்டனம்

கொழும்பு, மே 8

மே தினக் கூட்டத்தில் நீதிமன்றத் தீர்ப்பு குறித்து ஜனாதிபதி வெளியிட்ட கருத்துகள், ஜனநாயகத்தின் அடித்தளமான நீதித்துறையின் சுயாதீனத்தை சீர்குலைப்பதாக இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் கவலை வெளியிட்டுள்ளது.

இதுதொடர்பில் அந்தச் சங்கம் மேலும் தெரிவித்துள்ளதாவது:

எதிர்வரும் 25 ஆம் திகதி வழங்கப்படவுள்ள ஒரு நீதிமன்றத் தீர்ப்பு குறித்து முன்கூட்டியே கருத்து வெளியிட்டதுடன், அந்தத் தீர்ப்பினை மக்கள் அனைவரும் கரகோசம் எழுப்பி வரவேற்பார்கள் என்றும் குறிப்பிட்டிருந்தார்.

இந்தக் கருத்தானது-

நீதிமன்றம் வழங்கவுள்ள தீர்ப்பைத் தீர்மானிக்கும் அல்லது அதில் செல்வாக்குச் செலுத்தும் ஒரு முயற்சியாகத் தெரிவதோடு, நீதிச் செயன்முறையில் நிறைவேற்றுத்துறை மேற்கொள்ளும் தலையீடாகவே பார்க்கப்படுகிறது. நீதிப்பணிகளில் ஈடுபட்டுள்ள எவரும், தமக்கு மேலதிகாரம் கொண்ட நீதிமன்றங்கள் தவிர்ந்த, வேறு எந்தவொரு நபரிடமிருந்தும் கிடைக்கப்பெறும் பணிப்புரைகளுக்கோ அல்லது தலையீடுகளுக்கோ உட்படாமல் சுதந்திரமாகச் செயற்படவேண்டும்.

நீதித்துறை சுதந்திரம் என்பது வெறும் ஒரு நிறுவனம் சார்ந்த பாதுகாப்பு மட்டுமல்ல, அது தனிமனித கண்ணியம் மற்றும் சட்டவாட்சியின் பாதுகாவலனாகும். ஜனாதிபதியின் இத்தகைய கருத்துகள் நீதித்துறை மீது பொதுமக்கள் வைத்துள்ள நம்பிக்கையைச் சீர்குலைக்கும் - என்றுள்ளது. (ச-இ)

# கம்மன்பில கூறிய கருத்துகள் விசாரணைக்கு உட்படுத்தப்படும்

## பொலிஸ் பேச்சாளர் தெரிவிப்பு

கொழும்பு, மே 8

திறைசேரியின் நிதி கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விசாரணையில் இருந்தபோது மர்மமான முறையில் உயிரிழந்த அதிகாரி ரங்க நிஷாந்தவின் மரணம் தொடர்பாக பிவிதுரு ஹெல உறுமயக் கட்சியின் தலைவர் உதய கம்மன்பில தெரிவித்த கருத்துகள் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளன.

இதுதொடர்பாக கம்மன்பிலவிடம் விசாரணை நடத்தி, அவர் வேண்டுமென்றே விசாரணையைத் திசைதிருப்பியிருந்தால் அவரை கைது செய்ய நேரிடும் எனப் பொலிஸார் எச்சரித்துள்ளனர்.

உதய கம்மன்பில இந்த மரணம் தொடர்பாக ஐந்து காரணங்களை முன்வைத்து, தற்போதைய உடற்கூற்றுப் பரிசோதனை அறிக்கையை நிராகரிப்பதாக கடந்த 4 ஆம் திகதி தெரிவித்திருந்தார். மரண விசாரணை முடிவதற்கு முன்னரே இது தற்கொலை என்று பொலிஸ் பேச்சாளர் அறிவித்தது ஏன்? என்றும், கைரேகை அறிக்கை வரும் வரை காத்திருக்க முடியாத அளவுக்கு ஏதோ ஒரு சக்திவாய்ந்த நபரின் அழுத்தம் விசாரணைக்குழுவின் மீது உள்ளது என்றும் அவர் சந்தேகம் வெளியிட்டிருந்தார்.

இதற்குப் பதிலளித்துள்ள பொலிஸ் பேச்சாளர் எப். யூ. வுட்லர், கம்மன்பிலவின் கருத்துகள் பொய்யானவை என்று குறிப்பிட்டுள்ளார். கம்மன்பிலவிடம் விரைவில் வாக்குமூலம் பெறப்படும் என்றும், விசாரணையைத் தவறாக வழிநடத்தும் வகையில் அவர் பொய்ப் பரப்புரை செய்திருந்தால், அந்த அடிப்படையில் அவர் கைதுசெய்யப்படுவார் என்றும் வுட்லர் தெரிவித்துள்ளார். குளியாப்பிட்டிய நீதிமன்றத்தில் நடைபெற்று வரும் இந்த மரணம் தொடர்பான விசாரணைக்கு கம்மன்பிலவை அழைத்து அவரது சாட்சியத்தைப் பதிவு செய்யவும் பொலிஸார் திட்டமிட்டுள்ளனர். சட்ட மருத்துவ நிபுணர்கள் மற்றும் விசாரணைக்குழுவினர் சம்பவ இடத்தைப் பார்வையிட்டு, உடற்கூற்றுப் பரிசோதனை செய்த பின்னரே இது தற்கொலை என்ற முடிவுக்கு வந்துள்ளனர். குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினரின் அவதானிப்பின்படி, சம்பவ இடத்தில் எந்தவிதமான போராட்டமோ அல்லது மோதலோ நடந்ததற்கான அடையாளங்கள் எதுவும் இல்லை.

உயிரிழந்த அதிகாரி இதற்கு முன்னர் மூன்று சந்தர்ப்பங்களில் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திடம் வாக்குமூலம் வழங்கியிருந்தார். அவர் விசாரணைக்கு முழு ஒத்துழைப்பு வழங்கியிருந்தார் என்றும் பொலிஸ் பேச்சாளர் தெரிவித்துள்ளார். (ச-இ)

# அநுரவும் விஜய்யும் பொய்

## கூறுகிறார் சாமர சம்பத்

கொழும்பு, மே 8

ஜனாதிபதி தலைமையிலான இந்த அரசாங்கம் எப்படி பொய்களை அள்ளி வீசி ஆட்சிக்கு வந்ததோ அதே போன்றுதான் இந்தியாவில் தமிழ்நாட்டில் விஜய்யும் பொய்களை அள்ளி வீசி தற்போது ஆட்சிக்கு வந்துள்ளார் என புதிய ஜனநாயக முன்னணியின் பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத் நாடாளுமன்றில் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

தமிழ்நாட்டில் ஆட்சிக்கு விஜய் வந்துள்ளார். எமது ஆளும் தரப்பைப் போன்றுதான் விஜய்யும் பொய்களை வாரி வழங்கியுள்ளார். இங்குள்ள நிலைமையைப் போன்று விஜய்க்கும் தமிழ்நாட்டில் ஆட்சியைக் கொண்டு செல்லமுடியுமாக இருக்குமோ தெரியவில்லை - என்றார். (ச-இ)

# ஊழலை ஒழிப்பதாக வந்த அரசு மோசடிகளை மூடிமறைக்கிறது

## ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி காட்டம்

கொழும்பு, மே 8

அரசாங்கம் கடந்த கால ஊழல்களைப் பேசிக்கொண்டு தற்போதைய மோசடிகளை மூடிமறைத்துக்கொண்டிருக்கின்றது என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலாளர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் அமைச்சர்கள் மீது சுமத்தப்படும் ஊழல் குற்றச்சாட்டுகளை நிரூபிப்பது கல்லிலிருந்து பட்டை உரிப்பது போன்ற சாத்தியமற்ற காரியம் என பிரதி அமைச்சர் மஹிந்த ஜயசிங்க கூறுவது, இந்த ஆட்சியின் போலி முகத்தை அம்பலப்படுத்தியுள்ளது. அரசாங்கத்தின் சட்டபூர்வமான தன்மை இன்று கேள்விக் குறியாகியுள்ளது. 323 கொள்கலன் மோசடி விவகாரம் குறித்து விசாரணை நடத்த நிதி அமைச்சரையோ அல்லது செயலாளர்களையோ அழைத்தால் அவர்கள் வருவதில்லை. தம்மைத் தூய்மையானவர்கள் எனக் கூறிக்கொள்ளும் இவர்கள் ஏன் விசாரணையை எதிர்கொள்ளத் தயங்குகிறார்கள்?

தரமற்ற நிலக்கரியை இறக்குமதி செய்ததால் மின் உற்பத்தி பாதிப்படைந்து, நஷ்டம் ஏற்பட்டுள்ளது. நீதிமன்றம் அனைவருக்கும் சமமானது என்று மேடைகளில் பேசினீர்கள். ஆனால், உங்கள் அமைச்சர்கள் மட்டும் சட்டத்துக்கு அப்பாற்பட்டவர்களா? தற்போதைய மோசடிகள் பற்றிப் பேசும் போது ஏன் 2011 ஆம் ஆண்டு காலப்பகுதிக்கு விசாரணைகளைப் பின்னோக்கி இழுக்கிறீர்கள்? - என்றார். ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தன்னிச்சையான தீர்மானங்களால் தனிமைப்படுத்தப்படும் இலங்கை

## டிலான் பெரேரா ரெிவிப்பு



**கொழும்பு,மே 8**

**இலங்கை அரசாங்கத்தின் தன்னிச்சையான தீர்மானங்கள் மற்றும் முறைகேடான டெண்டர் நடைமுறைகள் காரணமாக, சர்வதேச ரீதியில் இலங்கை இராஜதந்திர நெருக்கடிகளைச் சந்திக்க நேரிடும் என முன்னாள் அமைச்சர் டிலான் பெரேரா எச்சரிக்கை விடுத்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,
நாடாளுமன்றத்தில் சபாநாயகரின் செயற்பாடுகள் தற்போது நடுநிலையாக இல்லை. குறிப்பாக மத்திய வங்கியின் பிணைமுறி விவகாரம் மற்றும் நிதி முறைகேடுகள் குறித்து எதிர்க்கட்சிகள் எழுப்பும் கேள்விகளைத் திசைதிருப்ப சபாநாயகர் முயற்சிக்கிறார். நிதி அமைச்சின் செயலாளர் மற்றும் மத்திய வங்கி ஆளுநர் ஆகியோர் இழைக்கும் தவறுகளுக்கு அரசாங்கம் முழுமையாகப் பொறுப்பேற்க வேண்டும்.
இதுதொடர்பான முறையான விசாரணைகள் நிறைவடையும் வரை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தமது பதவிகளிலிருந்து தற்காலிகமாக விலகி இருக்கவேண்டும். ஈ-கடவுச்சீட்டு அச்சிடுவதற்காக விண்ணப்பித்திருந்த தகுதியான போலந்து நாட்டு நிறுவனம் உள்ளிட்ட ஆறு சர்வதேச நிறுவனங்களை எவ்வித நியாயமான காரணமுமின்றி நிராகரித்துவிட்டு, அரசாங்கத்துக்கு நெருக்கமான ஒருவருக்கு இந்த ஒப்பந்தத்தை வழங்க முயற்சிக்கின்றது. இந்த டெண்டர் நடைமுறையில் தமக்கு அநீதி இழைக்கப்பட்டதாகக் கருதி, போலந்து அரசாங்கம் ஐரோப்பிய ஒன்றியத்திடம் உத்தியோகபூர்வமாகப் புகாரளிக்கத் தயாராகிவருகின்றது.
இது நமது நாட்டின் சர்வதேச நற்பெயரைக் கடுமையாகப் பாதிப்பதுடன், இலங்கை உலக அரங்கில் தனிமைப்படுத்தப்படும் நிலையை உருவாக்கும். எனவே, அரசாங்கம் உடனடியாக இந்த ஊழல் குற்றச்சாட்டுகள் குறித்து வெளிப்படையான விசாரணைகளை நடத்த வேண்டும். நாட்டு மக்களின் வரிப் பணத்தை வீணடிப்பதைத் தடுத்து சர்வதேச ரீதியில் நாட்டின் கௌரவத்தைப் பாதுகாக்க முன்வர வேண்டும் - என்றார். (ச-இ)

# மின்னணுக் கடவுச்சீட்டு கொள்வனவில் மோசடி

## திலித் ஜயவீர தெரிவிப்பு

கொழும்பு, மே 8
இலங்கையின் மின்னணுக் கடவுச்சீட்டுக் கொள்வனவுக்கான ஒப்பந்தப்புள்ளிக் கோரலில் முறைகேடுகள் இடம்பெற்றுள்ளதாகவும், தகுதியான நிறுவனங்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளதாகவும் சர்வஜன அதிகாரக் கட்சியின் தலைவர் திலித் ஜயவீர தெரிவித்துள்ளார்.
போலந்து அரசாங்கத்துடன் தொடர்புடைய ஒரு நிறுவனம், சர்வதேச அனுபவம் மற்றும் குறைந்த விலை என சிறந்த ஒப்பந்தப்புள்ளியை சமர்ப்பித்திருந்த போதிலும், அது நியாயமற்ற முறையில் நிராகரிக்கப்பட்டுள்ளது.
இந்த விவகாரம் குறித்து போலந்து அரசாங்கம் ஏற்கனவே இலங்கை அரசாங்கத்திடமும், வெளிவிவகார அமைச்சிடமும் தனது கவலையை வெளியிட்டுள்ளது. தகுதியுள்ள நிறுவனங்களைத் தவிர்த்து, தமக்கு நெருக்கமான ஒரு நிறுவனத்துக்கு இந்த ஒப்பந்தம் வழங்கப்பட்டுள்ளது. அரசாங்கம் ஒரு ஊழல் விவகாரத்தை மூடிமறைக்க மற்றுமொரு புதிய சர்ச்சையை உருவாக்கி மக்களின் கவனத்தைத் திசைதிருப்புகிறது.
இவை வெறும் நிர்வாகத் தவறுகள் அல்ல; திட்டமிட்டு நடத்தப்படும் ஊழல்கள். இந்த மின்னணுக் கடவுச்சீட்டு விவகாரம் குறித்து சர்வதேச சமூகத்துக்கும் பொதுமக்களுக்கும் அரசாங்கம் முறையான பதிலளிக்கவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

# தேசிய குழு விளையாட்டுக்களுக்கான பரிசுத்தொகையை அதிகரிக்க முடிவு

யாழ்ப்பாணம், மே 8



தேசிய மட்டத்தில் சாதிக்கும், வடக்கு மாகாண விளையாட்டு வீரர்களைக் கௌரவிக்கும் 'வர்ண இரவு' விருது வழங்கலின் போது, வழங்கப்படும் பரிசுத் தொகையில், குழு விளையாட்டுக்களுக்கான தொகையை அதிகரிப்பதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன் தெரிவித்துள்ளார்.
வடக்கு மாகாண விளையாட்டுத்துறை அபிவிருத்தி தொடர்பான விசேட கலந்துரையாடலில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.
கலந்துரையாடலில் தனிநபர் விளையாட்டு நிகழ்வுகளில் தங்கப் பதக்கம் பெறுபவருக்கு வழங்கப்படும் பரிசுத் தொகைக்குச் சமனான தொகையை, குழு நிகழ்வுகளில் வெற்றிபெறும் குழுவின் ஒவ்வொரு உறுப்பினருக்கும் வழங்குவது நடைமுறைச் சவாலானது என அதிகாரிகளால் சுட்டிக்காட்டப்பட்டது. எவ்வாறாயினும், குழு விளையாட்டு நிகழ்வுகளுக்கான பரிசுத் தொகையை கணிசமாக அதிகரிப்பதற்கு இதன்போது இணக்கம் காணப்பட்டது.
தனிப்பட்ட பயிற்றுவிப்பாளர்களுக்கான கொடுப்பனவுகள் வழங்கப்படாமை மற்றும் வீரர்களுக்கான ஊட்டச் சத்துக் கொடுப்பனவுகளை அதிகரிக்க வேண்டியதன் அவசியம் குறித்தும் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன. இதையடுத்து மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர்கள் மற்றும் பயிற்றுவிப்பாளர்களின் பிரதிநிதி ஒருவரையும் உள்ளடக்கிய விசேட குழுவொன்றை உடனடியாக அமைக்குமாறு ஆளுநர் பணித்தார்.
இந்தக் குழு பரிசுத்தொகை, பயிற்றுவிப்பாளர்களுக்கான கொடுப்பனவு, ஊட்டச்சத்துக் கொடுப்பனவு மற்றும் அதுதொடர்பான விடயங்களை விரிவாக ஆராய்ந்து தகுந்த பரிந்துரைகளை முன்வைக்கும்.
அதேவேளை விளையாட்டுத்துறையில் முழுமையாக ஈடுபடுவோரின் எதிர்கால வேலைவாய்ப்பை உறுதிப்படுத்துதல் தொடர்பான தேசியக்கொள்கை சார்ந்த விடயங்கள் தொடர்பில், மத்திய விளையாட்டுத்துறை அமைச்சின் கவனத்துக்குக் கொண்டு சென்று உரிய கோரிக்கைகளை முன்வைப்பது தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டது. (க-66,113)

# மஹோற்சவம்

யாழ்ப்பாணம், மே 8
சுன்னாகம் கந்தரோடை அருணாந்தப் பிள்ளையார் ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 16ஆம் திகதி சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும். எதிர்வரும் 27ஆம் திகதி வேட்டைத்திருவிழாவும், 28ஆம் திகதி சப்பறத்திருவிழாவும், 29ஆம் திகதி தேர்த்திருவிழாவும், 30ஆம் திகதி தீர்த்தத்திருவிழாவும், 31ஆம் திகதி பூங்காவனத்திருவிழாவும் இடம்பெறும். திருவிழாக்காலத்தில் தினமும் காலைத்திருவிழா காலை 9.30 மணிக்கும், மாலைத்திருவிழா மாலை 6.30 மணிக்கும் இடம்பெறும். (க)



# புதிய விமானம் என்று கூறி பழைய விமானம் குத்தகைக்கு

## தயாசிறி ஜயசேகர குற்றச்சாட்டு

கொழும்பு, மே 8
ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனம் 14 ஆண்டுகள் பழமையான விமானம் ஒன்றை அதிக விலைக்கு குத்தகைக்கு எடுத்துள்ளமை தொடர்பில் அரசாங்கம் மக்களைத் தவறாக வழிநடத்துகின்றது என்று எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர குற்றஞ்சாட்டியுள்ளார்.
ஊடகவியலாளர் ஒருவரால் மேற்கொண்ட நீண்ட போராட்டத்தின் விளைவாக தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் மூலம் இந்தத் தகவல் வெளிவந்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
இது 8 ஆண்டுகால இயங்கு குத்தகை ஒப்பந்தமாகும். இதற்காக மாதம் ஒன்று 275,000 அமெரிக்க டொலர் குத்தகை தவணையாகச் செலுத்தப்படவேண்டும். புதிய விமானங்களை வாங்குகிறோம் என்று கூறிவிட்டு, 14 வருடங்கள் பழமையான விமானத்துக்கு இவ்வளவு பெரிய தொகையைச் செலவிடுவது உண்மையான தன்மையை மறைத்து மக்களைத் தவறாக வழிநடத்தும் செயலாகும். 2025 ஜூன் முதல் 2033 ஜூன் வரையிலான 8 ஆண்டுகளில், மொத்தம் 26.6 மில்லியன் அமெரிக்க டொலர் செலுத்தப்படவுள்ளது. பொதுப்பணம் இவ்வாறு அதிக விலைக்குப் பழைய விமானங்களைக் குத்தகைக்கு எடுக்கப் பயன்படுத்தப்படுவது குறித்து முறையான விசாரணை நடத்தப்படவேண்டும்- என்றார். (ச-இ)

# ரூபா வீழ்ச்சி

கொழும்பு,மே 8
இலங்கை மத்திய வங்கி நேற்று வெளியிட்டுள்ள நாணய மாற்று விகிதங்களின்படி, அமெரிக்க டொலருக்கு எதிராக இலங்கை ரூபாவின் மதிப்பு மேலும் வீழ்ச்சியடைந்துள்ளது. அமெரிக்க டொலர் கொள்வனவு விலை ரூ. 316.40 இலிருந்து ரூ. 317.26 ஆக அதிகரித்துள்ளது.
அமெரிக்க டொலர் மட்டுமன்றி, ஏனைய சர்வதேச நாணயங்களுக்கு எதிராகவும் ரூபாவின் மதிப்பு நேற்று வீழ்ச்சியடைந்துள்ளது. குறிப்பாக வளைகுடா நாடுகளின் நாணயங்களுக்கு எதிராகவும் ரூபா பலவீனமடைந்துள்ளது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# யாழில் ஆடைவடிவமைத்தல் கண்காட்சியும் விற்பனையும்



வடமாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின், யாழ். மாவட்டச் செயலக கிராம அபிவிருத்திப் பிரிவு நடத்திய ஆடை வடிவமைத்தல் மற்றும் அழகுக்கலை மனைப்பொருளியல் உற்பத்திப்பொருள்களின் மாவட்டக் கண்காட்சியும், விற் பனையும் மாவட்டச் செயலக வளாகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றன. நிகழ்வில் விருந்தினர்களால் கண்காட்சிக்கூடங்கள் திறக்கப்பட்டதைத் தொடர்ந்து, மாவட்டச் செயலகக் கேட்போர் கூடத்தில் அரங்க நிகழ்வுகள் நடைபெற்றன. இதில் பிரதேச செயலக ரீதியாக நடைபெற்ற 15 வகையான போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கு சிறப்புப் பரிசில்களும், டிப்ளோமாச் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. உற்பத்திப் பொருள்கள் போட்டியில் முதலாம் இடத்தை கோப்பாய் சரஸ்வதி தயாரிப்புச் சங்கமும், இரண்டாவது இடத்தை காரைநகர் மத்திய மாதர் அபிவிருத்திச் சங்கமும், மூன்றாம் இடத்தை கரவெட்டி இமையாணன் மத்திய கிராம அபிவிருத்திச் சங்கமும் பெற்றுக் கொண்டன. தொடர்ந்து Fairmed Foundation இணைப்பாளரால் 15 பிரதேச செயலர் பிரிவுகளுக்கும், கேக் ஐசிங் பயிற்சி நெறிக்கான உபகரணங்கள் வழங்கப்பட்டன. நிகழ்வில் யாழ். மாவட்டச் செயலர் மருதலிங்கம் பிரதீபன், வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் அம்பலவாணர் சோதிநாதன், கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் மாகாணப் பணிப்பாளர் திருமதி கஜானி பார்த்தீபன், Fairmed Foundation இணைப்பாளர் மருத்துவர் நயனி சூரியாராச்சி ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்துகொண்டனர்.

(க-27)



# சாவகச்சேரிக்கு புதிய கணக்காளர்



யாழ்ப்பாணம், மே 8

சாவகச்சேரிப் பிரதேச செயலகத்தின் புதிய கணக்காளராக, அண்ணாமலை கலைச்செல்வன் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் யாழ். மாவட்டச் செயலர் மருதலிங்கம் பிரதீபனிடம் நேற்றுமுன்தினம் தனக்கான நியமனக் கடிதத்தைப் பெற்றுக் கொண்டார். அன்றைய தினமே தனது கடமைகளையும் பொறுப்பேற்றார். இவர் இதற்கு முன்னர் வடமாகாண கால்நடை உற்பத்திச் சுகாதாரத் திணைக் களத்தின் கணக்காளராகக் கடமையாற்றியுள்ளார்.

(க-66)




## நல்லூர் பிரதேச சபை- கொக்குவில்
## 2026ம் ஆண்டிற்கான 01.06.2026 தொடக்கம் 31.12.2026 வரையான கேள்வி அறிவித்தல்

நல்லூர் பிரதேச சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட கீழ்க்காணும் இறைச்சிக்கடைகளை, 01.06.2026ம் திகதி தொடக்கம் 31.12.2026ம் திகதி வரை குத்தகைக்கு விடுவதற்கான கேள்விகள் கோரப்பட்டுள்ளன.

கேள்விப் பத்திரம் வழங்கும் காலம் : 08.05.2026 – 18.05.2026ந் திகதி மு.ப 10.00 மணி வரை
கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் இறுதித்திகதி : 18.05.2026ந் திகதி பி.ப 12.00 மணி வரை
கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதி : 18.05.2026ந் திகதி பி.ப 12.00மணிக்கு
கேள்விப்பத்திரம் திறக்கப்படும் இடம் : கலந்துரையாடல் மண்டபம், தலைமை அலுவலகம், நல்லூர் பிரதேச சபை

2026ம் ஆண்டுக்கு இறைச்சிக்கடைகளுக்கான குத்தகை அட்டவணை
(01.06.2026 தொடக்கம் 31.12.2026 வரையானது)

| இல | இறைச்சிக்கடைகள் | மீளளிக்கப்படாத கேள்விப்படிவக் கட்டணம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணம் | 2026 ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக்குறைந்த கேள்வித் தொகை (வற்வரி தவிர்ந்த) ரூபா. |
|---|---|---|---|---|
| தலைமை அலுவலகம் | | | | |
| 1 | திருநெல்வேலிச்சந்தை கோழியிறைச்சிக் கடை - 01 | 1,000.00 | 1,000.00 | 46,000.00 |
| 2 | திருநெல்வேலிச்சந்தை கோழியிறைச்சிக் கடை- 02 | 1,000.00 | 1,000.00 | 83,000.00 |
| கொக்குவில் உப அலுவலகம் | | | | |
| 1 | கோண்டாவில் ஸ்ரேசனடி கோழியிறைச்சிக்கடை | 1,000.00 | 3,500.00 | 304,000.00 |

1. கேள்விப்பத்திரங்கள் இரண்டு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு, மூலப்பிரதியுட்பட இரு பிரதிகளையும் செயலாளர் நல்லூர் பிரதேச சபை, 14/5, கருவப்புலம் வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில் என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு, தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு, பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும் அல்லது இதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடுதல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட கேள்விகள் நிராகரிக்கப்படும்.
2. அட்டவணையில் உள்ளவாறு மீளளிக்கப்படாத படிவக்கட்டணம் மற்றும் மீளளிக்கப்படக்கூடிய வைப்புப்பணம் என்பவற்றை செலுத்தி கேள்விப்பத்திரங்களை பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். கேள்விப் பத்திரங்களை பெறுபவர்கள் தமது தேசிய அடையாள அட்டையையும் கிராம அலுவலரினால் வழங்கப்படும் வதிவிடச் சான்றிதழையும் கொண்டு வருதல் வேண்டும்.
3. கேள்விப்படிவக்கட்டணம், கேள்வித் தொகை, மாத வாடகை என்பவற்றுக்கு காலத்திற்குக் காலம் அரசாங்கத்தினால் விதிக்கப்படும் வரியும் செலுத்தப்பட வேண்டும்.
4. உள்ளூராட்சி மன்றங்களினால் "தவறுனராக" கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப்பத்திரம் வழங்கப்படமாட்டாது. எனினும் படிவம் வழங்கப்பட்ட பின் அறியும் பட்சத்தில் அவரின் கேள்வி நிராகரிக்கப்படும்.
5. இறைச்சிக் கடைகளுக்கான கேள்வியில் சித்திபெறும் கேள்விதாரஉ சுகாதார வைத்திய அதிகாரியால் அறிவிக்கப்படும் சுகாதார மேம்பாட்டு விடயங்களைக் கருத்திற்கொள்ளத் தவறுமிடத்து குத்தகை ஒப்பந்தத்தினை இரத்துச் செய்வதற்கு சபைக்கு அதிகாரம் உண்டு.
6. இறைச்சிக் கடைகளின் வெளிப்புறத்தே இறைச்சிகளுக்கான விலைப்பட்டியல் காட்சிப்படுத்தப்பட வேண்டும்.
7. இறைச்சிகளுக்கான விலையில் மாற்றம் செய்வதாயின் பிரதேச சபையின் ஒப்புதலைப் பெற்ற பின்னரே மாற்றம் செய்யப்பட வேண்டும்.
8. எந்தவொரு கேள்வியையும் ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச்சபைக்கு பூரண அதிகாரம் உண்டு.
9. ஏற்றுக்கொள்ளக் கூடிய குறைந்த கேள்வித் தொகையிலும் குறைவான கேள்வி கோருபவர்களின் கேள்வி வைப்புப்பணம் சபை நிதிக்கு மாற்றப்பட்டு கேள்விகாரரின் பெயர் "தவறுனர்" பட்டியலில் சேர்க்கப்படும்.
10. கேள்வி திறக்கப்படும் சந்தர்ப்பத்தில் கேள்விதாரரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமூகமளிக்கலாம்.
11. தெரிவு செய்யப்படும் கேள்விக்காரர் சித்திகர கேள்வித்தொகையின் 4மாதங்களுக்கான தவணைக் கட்டணங்களை 2026.05.26ம் திகதிக்கு முன்னர் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் ஒன்றினைச் செய்து கொள்ள வேண்டும்.
12. கேள்வி தொடர்பான மேலதிக விபரங்களை தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

தவிசாளர்,
நல்லூர் பிரதேச சபை, கொக்குவில், 08.05.2026

# பல்கலை கிளிநொச்சி வளாக நுழைவாயிலில் எழுத்துப்பிழை

யாழ்ப்பாணம், மே 8

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கிளிநொச்சி அறிவியல் நகர் வளாகத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுவரும் பிரதான நுழைவாயிலில், பல்கலைக்கழகத்தின் பெயர் எழுத்துப் பிழையுடன் பொறிக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழகத்தின் நுழைவாயிலிலேயே இவ்வாறான அடிப்படை எழுத்துப் பிழை இடம்பெற்றிருப்பது தொடர்பாக பலரும் விசனம் தெரிவித்துள்ளனர்.

(ச-66)

**மாபிள் வேலை**
உங்கள் வீடுகளிற்கு தரமான முறையில் அழகாக மாபிள் பதித்து தரப்படும்.
ஒரு சதுர அடி - 90 ரூபாய்.
நிலம் இழுத்து பதிக்க - 120 ரூபாய்
077 334 1281
(CR/47510) J-1

## பெயர்மாற்றம்

நாவாந்துறையை வசிப்பிடமாகக் கொண்ட அந்தோனிப்பிள்ளை கொன்சால்வே ஆகிய நான் எனது பெயரை அந்தோனிப்பிள்ளை கொன்சார்வே என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களினும் அந்தோனிப்பிள்ளை கொன்சார்வே என்றே கையொப்பம் இடுவேன் என இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு மக்களுக்கு அறியத்தருகின்றேன்.

அந்தோனிப்பிள்ளை கொன்சார்வே

## வலிகாமம் தெற்கு பிரதேசசபை - சுன்னாகம்
## பகிரங்க ஏலவிற்பனை அறிவித்தல்

எமது சபையின் தலைமை அலுவலக வளாகத்தில் தறிக்கப்பட்ட மரங்கள் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளன.

காலம் : 14.05.2026 வியாழக்கிழமை காலை 10.00 மணி

இடம் : தலைமை அலுவலகம், வலி தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்

நிபந்தனைகள்

1. ஏலதாரராக கலந்து கொள்பவர் ரூபா 500.00 மீளளிக்கப்படாத வைப்புப் பணமாக செலுத்துதல் வேண்டும் மு.ப. 10.00 பின்னர் ஏலதாரர் பதிவுகள் மேற்கொள்ளப்படமாட்டாது
2. சித்தியடைந்த ஏலத்தார் ஒப்புக்கொண்ட ஏலத்தொகை முழுவதையும் செலுத்திப் பொருட்களை அன்றைய தினமே அலுவலகத்தில் இருந்து அகற்றுதல் வேண்டும்
3. மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம் தொலைபேசி இலக்கம் 0212240017

தவிசாளர்
வலிகாமம் தெற்கு பிரதேச சபை,
சுன்னாகம். 08.05.2026

(CR/47508) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## நன்றி நவிலலும் 31ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம்
09 . 01 . 1947



மறைவு
10 . 04 . 2026

கடந்த 10.04.2026 அன்று சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவர்

### தர்மராஜா மகேந்திரன் (பபி)

அவர்கள் நோயுற்றிருந்த போது வீட்டிலும், வைத்தியசாலையிலும் வந்து உதவியவர்களுக்கும், திருவடி நிழல் அடைந்த காலத்தில் இறுதிச் சடங்கில் கலந்து எமது துன்ப துயரங்களில் பங்கெடுத்து உதவிக்கரம் நீட்டியவர்களுக்கும், மாலைகள் அணிவித்து மலர் வளையம், பதாதைகள் வைத்தோருக்கும், தொலைபேசி மூலம் எமது கவலையில் பங்கெடுத்த உற்றார், உறவினர், நண்பர்களுக்கும், சமூகவலைத்தளங்களில், பத்திரிகைகளில் அனுதாபச் செய்தி அனுப்பியோரிற்கும், கண்ணீர் அஞ்சலிப் பிரசுரம் வெளியிட்டோருக்கும், இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்டோர் அனைவருக்கும் எமது உள்ளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மேலும் அன்னாரின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் நாளை (09.05.2026) சனிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும் அதனைத் தொடர்ந்து ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

"ஸ்ந்தவாஸ"
உரும்பிராய் வடக்கு

(CS/31767) J-1

குடும்பத்தினர்
077 198 0587

## மரண அறிவித்தல்

தோற்றம்
06 . 09 . 1965



மறைவு
07 . 05 . 2026

### செல்வி யோகநிதி இராசலிங்கம்

அராலி வடக்கு, வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், "பிரசாந்தி இல்லம்", மானிப்பாய் வீதி, ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி யோகநிதி இராசலிங்கம் அவர்கள் நேற்று (07.05.2026) வியாழக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசலிங்கம் - கனகமணி தம்பதியரின் அன்பு மகளும், தயாநிதி (லண்டன்), கலாநிதி ஆகியோரின் அன்புச் சகோதரியும், பாலவர்ணன் (லண்டன்), சிறிகுமார், கௌசலாதேவி, அஜித்தா, றஞ்ஜிற், சுயிற் ஆகியோரின் மைத்துனியும், விருஷ்ணி (லண்டன்), கீர்த்தன், லக்ஸ்மன் ஆகியோரின் சிறிய தாயாரும், றொபியாஸ், கஜனி ஆகியோரின் மாமியாரும், லூகாஸ், ஜொனாஸ், சிறிநிகா ஆகியோரின் பேர்த்தியும், சந்திர கௌரீசன், பவானி, சந்திரகுமார், ஜெயந்தி, பஞ்சநிதி, தாரணி ஆகியோரின் உடன் பிறவாச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (08.05.2026) வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் நடைபெற்று பிற்பகல் 1.00 மணியளவில் பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்
"பிரசாந்தி இல்லம்", மானிப்பாய் வீதி,
ஆனைக்கோட்டை
077 844 8680

(CS/61381) J-1



## 'மண்ணில் புதைந்த மலை' கவிதை நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், மே 8

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ்த் துறை மாணவி வீனா டிதுர்ஷா எழுதிய 'மண்ணில் புதைந்த மலை' கவிதை நூல் வெளியீட்டு விழா நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணப் பல்கலைக் கழக கைலாசபதி அரங்கில் பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றியத் தலைவர் த.யதுர்சன் தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் யாழ்ப்பாணப் பல் கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர். திருநாவுக்கரசு வேல்நம்பி பிரதம விருந்தினராகவும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர். நாகலிங்கம் பிரதீபராஜா, யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் செ. சிவசுப்பிரமணியம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொண்டனர். கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் விரிவுரையாளர் வேல்.நந்தன் நூல் அறிமுக வுரையையும், அரசியல், சமூக ஆய்வாளர் ச.நிலாந்தன் சிறப்புரையையும் ஆற்றினர். (ச-66)

## மரண அறிவித்தல்

அன்னை மடியில்
27 . 12 . 1933



ஆண்டவன் அடியில்
07 . 05 . 2026

### திருமதி நாகமுத்து சங்கரப்பிள்ளை

யா/கைதடி மேற்கைப் பிறப்பிடமாகவும், கைதடி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகமுத்து சங்கரப்பிள்ளை அவர்கள் நேற்று (07.05.2026) வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு - பெரியநாச்சி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான நாகநாதர் - சிதம்பரப்பிள்ளை தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை (பொலிஸ் உத்தியோகத்தர்) அவர்களின் மனைவியும், காலஞ்சென்ற சடப்பிள்ளை, பொன்னம்பலம், சுப்பையா, கணபதிப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான சேதர்பிள்ளை, ஆச்சிப்பிள்ளை, செல்லம்மா, சிவபாக்கியம் ஆகியோரின் மைத்துனியும், திருச்செல்வநாதன் (லண்டன்), சியோகநாதன் (சுவிஸ்), சிவானந்ததேவி (ஓய்வுநிலை ஆசிரியர்), சயந்தினி (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், ஜெயமாலா (லண்டன்), குளோசினி (சுவிஸ்), சிவசரணநாதன் (ஓய்வுநிலை கிராம உத்தியோகத்தர்), இரத்தினராசா (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும், நிருஜா, ஜெயாளன், சௌமியா-மதுரந், திருமாறன் - நித்தியா, அதிமாறன் - விதுர்ஷனா, சிவமாறன், தரணியன், துளசினி ஆகியோரின் பேர்த்தியும், மேயோன், நோமிகா, விகான், ஆரன் ஆகியோரின் பூட்டியுமாவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.05.2026) வெள்ளிக்கிழமை முற்பகல் 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக ஊற்றல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்
"முத்து பவளம்"
கைதடி வடக்கு, கைதடி.

(CS/31768) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# வாகன இலக்கத்தகடுகள் ஜூன் முதல் அச்சிடும் பணி

நாட்டில் நீண்டகாலமாகத் தாமதமடைந்துள்ள வாகன இலக்கத் தகடுகளை அச்சிடும் பணிகள் எதிர்வரும் ஜூன் மாதம் 10ஆம் திகதி முதல் மீள ஆரம்பிக்கப்படும் என போக்குவரத்து பிரதி அமைச்சர் பிரசன்ன குணசேன தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வாகன இலக்கத் தகடுகளை அச்சிடுவதற்காக புதிய நிறுவனம் ஒன்றுக்கு விலைமனு வழங்கப்பட்டுள்ளது. இதற்கான உத்தியோகபூர்வ ஒப்பந்தம் கடந்த மார்ச் மாதம் 10ஆம் திகதி அந்த நிறுவனத்துடன் கையெழுத்திடப்பட்டுள்ளது.

ஒப்பந்தத்தின் நிபந்தனைகளின்படி, ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்ட நாளிலிருந்து மூன்று மாத காலத்திற்குள் அச்சிடும் பணிகளை ஆரம்பிக்க வேண்டும்.

அதற்கமைய, ஜூன் மாதம் 10ஆம் திகதிக்குள் வாகன இலக்கத் தகடுகளை அச்சிடும் பணிகளை அந்த நிறுவனத்தினால் மீள ஆரம்பிக்க முடியும் – என்றார். (ச-இ)

## எதிர்வரும் 11ஆம் திகதிமுதல் காங்கேசன்துறை – கொழும்பு இடையே யாழ்தேவி ரயில்சேவை மீள ஆரம்பம்!

யாழ்ப்பாணம், மே 8

எதிர்வரும் 11ஆம் திகதி திங்கட்கிழமை முதல் காங்கேசன்துறை கொழும்பு கோட்டைக்கு இடையிலான யாழ்தேவி ரயில் சேவை மீள ஆரம்பிக்கவுள்ளது.

எனினும், இந்த ரயில் சேவையானது ஒரு நாளைக்கு ஒரு வழிப் பயண சேவையாகவே இடம்பெறுமெனவும், இருவழிப் பயணச் சேவை இடம்பெறாதெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

11ஆம் திகதி கொழும்பிலிருந்து காங்கேசன்துறை நோக்கி யாழ்தேவி ரயில் வருகை தரும். 12ஆம் திகதி காங்கேசன்துறையிலிருந்து கொழும்பு நோக்கி ரயில் மீண்டும் புறப்படும்.

டித்வா புயலால் சேதமடைந்த வடக்கு ரயில் பாதை திருத்த வேலைகளுக்கு முன்னர் யாழ்தேவி ரயிலானது தினசரி இருவழிப் பயணமாக முன்னெடுக்கப்பட்டிருந்த நிலையில் தற்போது சேவை மட்டுப்படுத்தப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ம-66)







## பொதுச்சபைக் கூட்ட அறிவித்தல்

கிளிநொச்சி மாவட்ட படப்பிடிப்பாளர் கூட்டுறவுச் சங்கம் எதிர்வரும் 12.05.2026 அன்றைய தினம் காலை 9.00 மணிக்கு கிளிநொச்சி கூட்டுறவாளர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. அன்றைய நிகழ்வில் புதிய நிர்வாகத் தெரிவு மற்றும் தொழில்முறைப் படப்பிடிப்பாளர், புதிய அங்கத்தவர்களினை இணைத்தல் என்பன இடம்பெறும். எனவே புதிதாக படப்பிடிப்பை மேற்கொள்பவர்கள் தங்களது புதிய பதிவினை சமூகம்தந்து உறுதிப்படுத்துமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

நிர்வாகத்தினர்,
கிளிநொச்சி மாவட்ட படப்பிடிப்பாளர் சங்கம்

(CS 30437) A

# கோட்டமட்டப் போட்டிகளில் ஒட்டுசுட்டான் ம.வி. முதலிடம்

ஒட்டுசுட்டான் கோட்டக்கல்வி அலுவலகத்துக்குட்பட்ட பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டுப்போட்டிகளில், ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயம் முதலாம் இடம்பெற்றுள்ளது. ஒட்டுசுட்டான் மகாவித்தியாலய மைதானத்தில்இடம்பெற்ற போட்டிகளில், 355 புள்ளிகளைப் பெற்று ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயம் முதலாம் இடத்தையும், 218 புள்ளிகளைப் பெற்று இடதுகரை அ.த.க. பாடசாலை இரண்டாம் இடத்தையும், 140 புள்ளிகளைப் பெற்று பண்டாரவன்னியன் மகாவித்தியாலயம் மூன்றாம் இடத்தையும் பெற்றுக் கொண்டன. ஒட்டுசுட்டான் மகாவித்தியாலய அதிபர் இ. கோனேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், ஒட்டுசுட்டான் பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலர் திருமதி தி.பிரம்மியா, துணுக்காய் வலயக் கல்வி அலுவலக உடற்கல்வி ஆசிரிய ஆலோசகர் பா.சசிதரன், பாடசாலை அதிபர்கள், ஆசிரிய ஆலோசகர்கள் மற்றும் பாடசாலை ஆசிரியர்கள் கலந்து கொண்டனர். (க-19)

## மரண அறிவித்தல்

பிறப்பு 28 . 04 . 1957



இறப்பு 07 . 05 . 2026

### வேலாயுதர் இராஜசூரியர் (குட்டி)

கல்வியங்காட்டைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் தற்போது ஞானபாஸ்கரோதய விளையாட்டு அரங்க வீதி, கல்வியங்காட்டை வசிப்பிடமாகவும் கொண்ட வேலாயுதர் இராஜசூரியர் (குட்டி) அவர்கள் நேற்று (07.05.2026) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலாயுதர் பெண் சிவபாக்கியத்தின் இளைய மகனும், Dr.சூரியகுமார் (லண்டன்), காலஞ்சென்ற சிவகுமாரி, காலஞ்சென்ற சொர்ணலிங்கம் மற்றும் சாந்தகுமாரி ஆகியோரின் அன்புச் சகோதரரும், Dr.சாந்தினி (லண்டன்), காலஞ்சென்ற இந்துமதி மற்றும் இளைப்பாறிய வட மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபை பணிப்பாளர் திரு.மோசஸ் மரியதாசன் ஆகியோரின் மைத்துனரும், Dr.காண்டீபன், Dr.பிரணீவ், Dr.பிரியங்கா, மிலேனி (சிறி ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகம்) ஆகியோரின் மாமனாரும், Dr.பிரசாந்தன் (அவுஸ்திரேலியா), Dr.காயத்திரி (லண்டன்), உமாசுதன் (அவுஸ்திரேலியா), கார்த்திகா (அவுஸ்திரேலியா), சுஜீதன் (லண்டன்), சாயிதன் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் சிறியதந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.05.2026) வெள்ளிக்கிழமை மாலை 3.00 மணியளவில் ஞானபாஸ்கரோதய விளையாட்டு அரங்க வீதியில் உள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் செம்மணி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

ஞானபாஸ்கரோதய
விளையாட்டு அரங்க வீதி,
கல்வியங்காடு, யாழ்ப்பாணம்.

தகவல்:
சகோதர சகோதரிகள்
071 8414 646

(CS 31770)A

# தெல்லிப்பழைப் பிரதேச செயலகத்துக்கு புதிய உதவிப் பிரதேச செயலர் நியமனம்

யாழ்ப்பாணம்,மே 8

தெல்லிப்பழைப் பிரதேச செயலகத்துக்கு, புதிய உதவிப் பிரதேச செயலராக செபஸ்தி நிஷான் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் தனக்கான நியமனக்கடிதத்தை, யாழ்.மாவட்டச் செயலர் மருதலிங்கம் பிரதீபனிடம் நேற்றுமுன்தினம் பெற்றுக் கொண்டார். அன்றையதினமே, தெல்லிப்பழைப் பிரதேச செயலகத்தில் தனது கடமைகளையும் பொறுப்பேற்றார். (க-66)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# த.வெ.க. தலைவர் விஜய்க்கு பெரும்பான்மை இல்லை!

ஆளுநர் விளக்கம்



சென்னை, மே 8

ஆட்சியமைக்க தேவையான பெரும்பான்மை தமிழக வெற்றிக்கழகத்துக்கு இல்லை. ஆட்சியமைக்க தேவையான பெரும்பான்மை இருப்பதை த.வெ.க. தலைவர் விஜய் நிறுவவில்லை. த.வெ.க. ஆட்சியமைக்க பெரும்பான்மை தேவை என தமிழக ஆளுநர் அர்லேகர் விஜயிடம் கூறியுள்ளார்.

தமிழக அரசியல் வரலாற்றில் 2026 சட்டமன்ற தேர்தல் ஒரு முக்கிய திருப்பமாக அமைந்துள்ளது. புதிய வரவான த.வெ.க. 108 இடங்களை கைப்பற்றி தனிப்பெரும் கட்சியாக உள்ளது.

தமிழக ஆளுநர் அர்லேகரை சந்தித்து, விஜய் நேற்று மாலை ஆட்சி அமைக்க உரிமை கோரினார். அப்போது அவர், த.வெ.க.வின் 108 எம்.எல்.ஏ.க்கள் மற்றும் காங்கிரசைச் சேர்ந்த 5 எம்.எல்.ஏ.க்கள் என மொத்தம் 113 எம்.எல்.ஏ.க்களின் பட்டியலை வழங்கினார்.

118 எம்.எல்.ஏ.க்கள் பெயர் பட்டியலை கொண்டு வந்தால் தான் ஆட்சி அமைக்க அனுமதிக்க முடியும். ஆட்சியமைக்க அழைக்க வேண்டுமெனில் த.வெ.க. தனது பெரும்பான்மையை நிரூபிக்க வேண்டும் என்றும் ஆளுநர் தெரிவித்துள்ளார். (ச)

## உண்டியல்...

இரண்டு சிறுவர்கள் உட்பட மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலயத்தின் உண்டியல் நேற்றுமுன்தினம் அதிகாலை உடைக்கப்பட்டு அண்ணளவாக 21 லட்சம் ரூபா பணம் திருடப்பட்டிருந்தது. இது தொடர்பில் ஊர்காவற்றுறை பொலிஸாரிடம் வழங்கப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைய மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வந்தனர். இந்த விசாரணைகளுக்கு அமைய, நேற்றையதினம் சந்தேகநபர்களாக மூவர் கைதுசெய்யப்பட்டனர். அவர்களில் இருவர் குறிகாட்டுவான் துறைமுகத்தில் வைத்தும் ஒருவர் நயினாதீவில் வைத்தும் கைது செய்யப்பட்டனர். கைதுசெய்யப்பட்ட மூவரும் முறையே 16, 17 மற்றும் 27 வயதுடையவர்கள். திருடப்பட்டதாகக் கூறப்படும் பணம் அவர்களிடம் இருந்து மீட்கப்பட்ட நிலையில் மேலதிக விசாரணை இடம்பெற்று வருகின்றது. (அ-ம-66)

## 36 பேருக்கு...

முன்கொண்டு செல்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தையிட்டி திஸ்ஸ விகாரை சட்டவிரோத விகாரை என வலிகாமம் வடக்குப் பிரதேச சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, கடந்த வருடம் டிசம்பர் மாதம் 21ஆம் திகதி தையிட்டி திஸ்ஸ விகாரைக்கு அருகில் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது. இதன்போது சிவகுரு ஆதீன முதல்வர் தவத்திரு வேலன் சுவாமிகள், வலிகாமம் கிழக்குப் பிரதேச சபையின் தவிசாளர் தியாகராஜா நிரோஷ், காணி உரிமையாளர் சாருஜன் உள்ளிட்ட ஐவர் கைது செய்யப்பட்டுப் பின்னர் விடுவிக்கப்பட்டிருந்தனர்.

இதனையடுத்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதாகக் குற்றம் சாட்டப்பட்டுப் பலாலிப் பொலிஸாரால் மல்லாகம் நீதவான் நீதிமன்றத்தில் 36 பேருக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்று வியாழக்கிழமை மீண்டும் மல்லாகம் நீதவான் நீதிமன்றத்தில் விசாரணைகளுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன்போது வழக்குடன் சம்பந்தப்பட்ட சிவகுரு ஆதீன முதல்வர் தவத்திரு வேலன் சுவாமிகள், வலிகாமம் கிழக்குப் பிரதேச சபையின் தவிசாளர் தியாகராஜா நிரோஷ், வலிகாமம் வடக்குப் பிரதேச சபையின் தவிசாளர் சோமசுந்தரம் சுகிர்தன், வலிகாமம் வடக்குப் பிரதேச சபையின் உறுப்பினர்கள், தையிட்டியில் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள காணிகளின் உரிமையாளர்கள், தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் செயற்பாட்டாளர்கள் மற்றும் பொதுமக்களென 33 பேர் மன்றில் முன்னிலையாகிருந்தனர்.

இதன்போது, பலாலிப் பொலிஸார் கேட்டுக் கொண்டதற்கமைய குறித்த வழக்கை முன்கொண்டு செல்வதாக நீதிபதி அறிவித்தார். ஏற்கனவே ஐந்து பேர் பொலிஸாருக்கு வாக்குமூலம் வழங்கியுள்ள நிலையில் அடுத்த வழக்குத் தவணைக்கு முன்னர் குறித்த வழக்குடன் சம்பந்தப்பட்ட 21 பேரைப் பலாலிப் பொலிஸ் நிலையத்துக்கு நேரடியாகச் சென்று வாக்குமூலம் வழங்குமாறும் நீதிபதி உத்தரவிட்டார். (அ-ம-26-20-66)

## 40 நாடு...

காலமாக கூடுதல் அவதானம் செலுத்தப்பட்டு வருகின்றது. இதற்கமைய 40 நாடுகளைச் சேர்ந்தவர்கள் விஸா இல்லாமல் இலங்கைக்குப் பயணம் மேற்கொள்வதற்குத் தற்போது அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஆறு மாதங்கள்வரை இந்த நடைமுறை அமுலில் இருக்கும். அதற்குப் பின்னர் இந்த விடயம் மறுஆய்வுக்கு உட்படுத்தப்படும்.

இலங்கை விஸா விலக்கு வழங்கியுள்ள 40 நாடுகளில் அமெரிக்கா, இஸ்ரேல், ஈரான் ஆகிய நாடுகளும் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம)

## குழந்தைகளின்...

குழியில் இருந்து இதுவரை 259 என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில், அவற்றில் 254 என்புத்தொகுதிகள் மீட்கப்பட்டுள்ளன. மூன்றாம்கட்ட அகழ்வுப் பணிகளின் 11ஆம் நாள் நடவடிக்கைகள் இன்று தொடரவுள்ளன.

பேராசிரியர் ராஜ் சோமதேவ தலைமையிலான குழுவினர் அகழ்வுப் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். நீதவான் எஸ்.லெனின்குமார் மற்றும் நீதிபதி உசைன் ஆகியோர் அகழ்வுப் பணிகளைக் கண்காணித்து வருகின்றனர். காணாமல் ஆக்கப்பட்டோர் ஆணைக்குழுவின் சட்டத்தரணி நிறஞ்சன், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சார்பில் சட்டத்தரணி ரணித்தா, சட்ட மருத்துவ அதிகாரி செல்லையா பிரணவன் தலைமையிலான குழுவினர் அகழ்வுப் பணிகளின்போது முன்னிலையாகி வருகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

## பழைய...

மாகாணசபைத் தேர்தல் தொடர்பில் ஆராய்ந்து விதப்புரைகளை முன்வைப்பதற்கான விசேட செயற்குழு நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நேற்றுமுன்தினம் கூடியது. இதன்போது, 'மாகாணசபைத் தேர்தலை நடத்துவதற்கான விதப்புரைகளை முன்வைப்பதற்கான குழு இதுவரை மூன்று தடவைகள் கூடியபோதிலும் எவ்வித முன்னேற்றமும் ஏற்படவில்லை' என்று அந்தக் குழுவின் உறுப்பினரான சாணக்கியன் எம்.பி. தெரிவித்தார்.

'மாகாணசபைத் தேர்தலை நடத்துவதற்கான சட்டச்சிக்கல்கள், அந்தச் சட்டச் சிக்கல்களைத் தீர்ப்பதற்கான வழிமுறைகள் தொடர்பில் அறிக்கை வழங்குமாறு கோரியும் சட்டமா அதிபர் திணைக்களம் அத்தகைய அறிக்கை எதையும் வழங்கவில்லை' என்றும் சாணக்கியன் எம்.பி. குற்றஞ்சாட்டினார். நாடாளுமன்ற உறுப்பினர்களான மனோகணேசன், நிசாம் காரியப்பர் மற்றும் ரஞ்சித் மத்தும பண்டார ஆகியோர் சாணக்கியனின் கூற்றை ஆமோதித்தனர்.

இதையடுத்தே, மாகாணசபைத் தேர்தலை பழைய முறையில் நடத்துவதற்கான தற்காலிக ஏற்பாடு ஒன்றைக் கொண்டுவருவது தொடர்பில் சட்டமா அதிபர் திணைக்களமும், தேர்தல்கள் ஆணைக்குழுவும் ஆராயவுள்ளன. சட்டமா அதிபர் திணைக்களத்தில் அழைப்புக்கு அமைய எதிர்வரும் 21ஆம் திகதி இந்தக் கலந்துரையாடல் நடைபெறவுள்ளது. (அ-ம)

## அவசரகாலச்...

புக் கட்டளைச் சட்டத்தின் கீழான இந்த தீர்மானத்துக்கு ஆதரவாக 145 வாக்குகளும், எதிராக 6 வாக்குகளும் அளிக்கப்பட்டன. (அ-ம)

## யாழ்...

கட்டடத் தொகுதியில் இன்று காலை 9 மணியில் இருந்து மாலை 4 மணி வரை இந்தக் குருதிக்கொடை நடைபெறவுள்ளது. (அ-ம-66-26)

## சிற்றுண்டிகளும்...

அதிகரிக்கப்பட்டுள்ளன. லாப்ஸ் எரிவாயுவின் விலை நேற்றுமுன்தினம் நள்ளிரவுமுதல் சடுதியாக அதிகரித்தது. இதையடுத்தே, உற்பத்திச் செலவுகளை ஈடுசெய்யும் வகையில் லாப்ஸ் எரிவாயுவைப் பயன்படுத்தும் உணவகங்களில் உணவுகள் மற்றும் சிற்றுண்டிகளின் விலை நேற்று நள்ளிரவுமுதல் அதிகரிக்கப்பட்டுள்ளது. இதன்படி, சோற்றுப் பார்சலின் விலை 25 ரூபாவாலும், பால் தேநீரின் விலை 10 ரூபாவாலும், தேநீரின் விலை 5 ரூபாவாலும், சிற்றுண்டிகளின் விலை 5 ரூபாவாலும் அதிகரித்துள்ளன. (அ-ம)

## ரயிலுடன்...

தில் அமர்ந்திருந்த நபரை மோதியதைத் தொடர்ந்து அவர் சம்பவ இடத்தில் உயிரிழந்தார். உயிரிழந்த நபரின் சடலம் அறிவியல் நகர் ரயில் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டு, அங்கிருந்து கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டது. உயிரிழந்தவரின் அடையாளம் இதுவரை உறுதி செய்யப்படவில்லை. சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மாங்குளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-55)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

முதியோர்களுக்காக
37 மாத முதிர்வின்போது வருடாந்தம்
13% | வ.வி.வ.வி 11.55%
Fitch Rating A (lka) WITH A STABLE OUTLOOK
076 8 700 700
CBC FINANCE நிலையான வைப்பு
உங்கள் வருமானத்தை அதிகரியுங்கள்
இலங்கை வைப்புக் காப்புறுதித் திட்டம்
இலங்கை மத்திய வங்கியினால் நிதி வியாபாரச் சட்டம் எண் 42, 2011-இன் கீழ் உரிமம் பெற்றது.
CBC FINANCE
A Fully Owned Subsidiary of Commercial Bank of Ceylon PLC

## ஆதிவாசி தலைவர் காலமானார்

மொனராகலை, மே 8

மொனராகலை மாவட்டத்தின் மடுல்ல பிரிவுக்குட்பட்ட ரத்துகல ஆதிவாசி கிராமத்தின் தலைவரான தானிகல மகா பண்டலாகே சுதா வன்னில அத்தோ காலமானார். சுவாசப் பாதிப்புக் காரணமாக வெலிசறை மார்பு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த இவர், தனது 62ஆவது வயதில் காலமாகியுள்ளார். (எ-இ)

**பெண் வேலையாள் தேவை**
அரியாலையில் வீட்டோடு தங்கி நின்று
வீட்டு வேலை செய்வதற்கும்,
பிள்ளை பராமரிப்பிற்கும்
பெண் வேலையாள் தேவை.
தொடர்பு: 0777 84 45 24
(CS31771) A



வலி.தென்மேற்குப் பிரதேசசபையின் ஏற்பாட்டில் சாவல்கட்டுப் பகுதியில் பாதீனிய ஒழிப்பு வேலைத்திட்டம் கடந்த செவ்வாய்க்கிழமை முன்னெடுக்கப் பட்டது. சபையில் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு அமைவாக இந்த வேலைத்திட்டம் கடந்தவாரம் உயரப்புலம் பகுதியில் இடம்பெற்றது. அதன் தொடர்ச்சியாக சாவல்கட்டுப் பகுதியிலும் முன்னெடுக்கப்பட்டது. இதில் மானிப்பாய் பிரதேச சபையின் உபதவிசாளர், உறுப்பினர்கள், பிரதேச சபையின் ஊழியர்கள், கிராம மக்கள் ஆகியோர் பங்கேற்றனர். (ச-27)

**மரண அறிவித்தல்**



தோற்றம்: 12 . 08 . 1955
மறைவு: 02 . 05 . 2026

**யோகராசா இந்திராணி**
**(ஓய்வுநிலை ஆசிரியை)**

யாழ்ப்பாணம் ஆவரங்கால் வன்னியசிங்கம் வீதியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட யோகராசா இந்திராணி (ஓய்வுநிலை ஆசிரியை) அவர்கள் கடந்த (02.05.2026) சனிக்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரேசு - இராசம்மா தம்பதியரின் அன்பு மகளும், யோகராசாவின் மனைவியும், சிறிபிரணவனின் அன்புத் தாயாரும், கமலராணி, செல்வமுத்து, வைகுந்தராணி, அம்பலவாணர், கோணேஸ்வரன் காலஞ்சென்ற தயாபரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஸ்ரீரங்கநாதன், யோகராசா, ராகினி, ராஜகுமாரி ஆகியோரின் மைத்துனியும், நீதன், விநோதன், கஜிதன் ஆகியோரின் அன்புச் சித்தியும், விஷ்ணுகிரி, விஷ்ணுசுதன், ஜகயாழினி ஆகியோரின் அன்புப் பெரியம்மாவும், ராஜி, விதுசா, பிரியங்கன், கதிர்கண்ணன், கதிர்பிரசுதன் ஆகியோரின் அன்பு அத்தையும், நிஷ்கலயினி, லக்சி ஆகியோரின் மாமியாரும், துதியன், இந்துஜன், டியா, அபிஷன் ஆகியோரின் பேர்த்தியுமாவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் (10.05.2026) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.00 மணியளவில் ஆவரங்கால் மேற்கு, வன்னியசிங்கம் வீதியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆவரங்கால் கரதடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்
வன்னியசிங்கம் வீதி, ஆவரங்கால்.
மகன் (சிறிபிரணவன்) : 0774050501
பெறாமகள் (சுஜீவா) : 0778449614
பெறாமகன் (நீதன்) : 0762956188
(CS/61383) J-1



## நிலத்தடி நீர் வளம் பூம்புகாரில் ஆய்வு

யாழ்ப்பாணம், மே 8

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் நீர் பாதுகாப்புக்கான WASPAR செயற்றிட்டத்தின் கீழ் இயங்கும் இளம் நீர் வாண்மையாளர் வட்டத்தினர், அரியாலை - பூம்புகார் மாதிரிக் கிராமத்தில் நிலத்தடி நீர் வளத்தை மேம்படுத்துவதற்கான விசேடகளஆய்வொன்றை அண்மையில் மேற்கொண்டுள்ளனர்.

யாழ். அரியாலை பகுதியில் அமைந்துள்ள பூம்புகார் மாதிரிக் கிராமத்தில் நீண்டகாலமாக நிலவி வரும் நிலத்தடி நீர் தொடர்பான சிக்கல்களுக்குத் தீர்வுகாணும் நோக்கில் இந்தச் செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்த ஆய்வின்போது பூம்புகார் கிராம மக்களின் நீர்ப்பயன்பாடு மற்றும் அவர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் குறித்து நேடியாகக் கேட்டறியப்பட்டது. கிராமத்தில் எழுமாறாகத் தெரிவு செய்யப்பட்ட சில கிணறுகளில் நீரின் பௌதிகத் தன்மை குறித்த முதற்கட்டப் பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டன. இந்தத் திட்டம் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படுவதன் மூலம் பூம்புகார் கிராமத்தில் நிலத்தடி நீரின் பாதுகாப்பான மற்றும் நிலைத்தன்மை வாய்ந்த பயன்பாட்டை நீண்டகால நோக்கில் உறுதிசெய்ய முடியும் எனத் தெரிவிக்கப்பட்டது. (ச)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 08.05.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.